Find us on facebook/tamilmirror · Follow us on tamilmirror · epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, APRIL 2, 2021

வெள்ளிக்கிழமை ஏப்ரல் 02, 2021 | ஒளி: 06 கதிர் 236 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | விலை ரூ.10

## 21 வயதாக திருத்தம்

இலங்கைப் பெண்களுக்கு வீட்டு மற்றும் வீட்டுப் பணிகள் சார்ந்த வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களில் ஈடுபடுவதற்காக தற்போது காணப்படும் குறைந்தபட்ச வயதெல்லை குறைக்கப்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவுக்கு 25 வயதும், ஏனைய மத்திய கிழக்கு நாடுகளுக்கு 23 வயதும் மற்றும் ஏனைய நாடுகளுக்கு 21 வயதாகவும் உள்ளது.

இவ்வாறான நிலையில், இலங்கைப் பெண்கள் வீட்டு மற்றும் வீட்டுப் பணிகள் சார்ந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபடுத்தும் குறைந்தபட்ச வயதை 21 ஆக திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு

**கூட்டமைப்புக்கு வீரசேகர எச்சரிக்கை**



பா.நிரோஸ்

வடக்கில் பிரிவினைவாத அரசியல் தலைவர்கள் பௌத்தத்திற்கு கௌரவம் அளிப்பதில்லை. 52 சதவீதமான தமிழர்கள் சிங்களவர் பகுதிகளில்தான் வாழ்கின்றார்கள் என்பதனை நினைவில் வைத்துக்கொ ள்ளுங்கள். பௌத்த சிங்கள மக்களின் பொறுமைக்கும் ஒர் எல்லை உண்டு என முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் அரச தரப்பு எம்.பியுமான ரியல் அட்மிரல் சரத் வீரசேகர சபையில் எச்சரித்தார்.

தொடர்ச்சி P2

## கர்மவினை வாழ விடாது

**பௌத்தம் சொல்கிறது என்கிறார் ஸ்ரீதரன் எம்.பி**

பா.நிரோஸ்



நீதிமன்ற கட்டளைகளை பிக்குமார் மீற முடியுமா? அப்படி மீறும் பிக்குமார்களுக்கு நீதிமன்றங்கள் வழங்கும் தண்டனை என்ன? நீதிமன்றத்தின் கட்டளையை மீறும் உரிமையை பிக்குகளுக்கு யார் கொடுத்தது? என்பது தொடர்பில் நீதித்துறை தெளிவுபடுத்த வேண்டுமென சபையில் வலியுறுத்திய தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பியான எஸ்.ஸ்ரீதரன் கருணை, காருண்ணியம் ,அன்பு,சகோதரத்துவம் பற்றிக்கற்பித்த புத்த பகவானை ஒரு யுத்த வடிவமாக,ஆக்கிரமிப்பின் வடிவமாக சிங்களத்தலைவர்களும் பிக்குகளும் மாற்றியுள்ளது என்றார்.

குருந்தூர் மலையில் நீங்கள் செய்யும் அநியாயம், நீங்கள் செய்யும் கர்ம வினைகள் உங்களை வாழ விடாது. இதுதொடர்பில் பௌத்தம் என்ன சொல்லியிருக்கிறது என்பது தொடர்பிலான புகைப்படங்கள் அனுராதபுரத்திலேயே இருக்கின்றன.

தொடர்ச்சி P2

### தம்மிக விவகாரம்:

## 5 மனுக்களும் தள்ளுபடி .இன்று சத்தியப்பிரமாணம்?

வர்த்தகரான தம்மிக பெரேராவை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் எம்.பியாக நியமித்தமையை சவாலுக்கு உட்படுத்தி, உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 5 அடிப்படை உரிமை மனுக்களையும் விசாரணைக்கு எடுக்காமலே உயர்நீதிமன்றம் நேற்று (21) தள்ளுபடி செய்தது.

தொடர்ச்சி P2

### ஐ.எம்.எப்புடன்

## இணக்கப்பாட்டை எட்ட முடியும்



சர்வதேச நாணய நிதியத்துடன் (ஐ.எம்.எப்) பணியாளர் மட்டத்திலான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள முடியும் எனவும், அதன் பின்னர் திட்டமிட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும் என தாம் எதிர்பார்ப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐ.எம்.எப்பின் பிரதிநிதிகள் குழுவினர் எதிர்வரும் 30 ஆம் திகதி வரையில் இலங்கையில் பல்வேறு அதிகார மட்ட கலந்துரையா டல்களில் ஈடுபடவுள்ளனர்.

அத்துடன் இலங்கையின் தற்போதைய நிலைமைகள், நெருக்கடி குறித்த தரவுகள் ரீதியான ஆய்வுகளையும் பெற்றுக்கொண்டு இலங்கையின் செயற்பாடுகளை கண்காணித்தே அடுத்த கட்ட தீர்மானங்களை முன்னெடுக்க

தொடர்ச்சி P2

### சர்வதேச கடன் உதவிகள் தொடர்பில்

## வெளிப்படைத்தன்மை அவசியம்

மஹேஸ்வரி விஜயனந்தன்

நிதி நிறுவனங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் நிதியுதவிகள் தொடர்பில் வெளிப்படைத்தன்மையற்ற கொள்கை கொண்ட நாடு இருக்குமாயின் அந்த நாட்டுக்கு எந்தவொரு நாடும் கடன் வழங்காது என அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார். அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் நேற்று (21) ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதில் தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

தொடர்ச்சி P2

## அத்தியாவசிய, உயிர்காக்கும் மருந்துகள் தீர்ந்துவிட்டன

**அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை**

அத்தியாவசிய மற்றும் உயிர் காக்கும் மருந்துகளின் கையிருப்பு தீர்ந்துள்ள நிலையில் வைத்தியசாலைகள் இயங்கிவருவதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் மீண்டும் எச்சரித்துள்ளது.

கொழும்பில் நேற்று (21) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே சங்கத்தின் உறுப்பினர் டொக்டர் பிரசாத் கொலம்பகே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## யோகா தினத்தில்

இந்தியா, இலங்கை உள்ளிட்ட நாடுகளில் 8ஆவது சர்வதேச யோகா தினம் நேற்று (21) அனுஷ்டிக்கப்பட்டது. இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்திருந்த யோகா தினம், கொழும்பு-07 சுதந்திர சதுக்கத்தில் காலை நடைபெற்றது. அதில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம், எம்.ஏ.சுமந்திரன், உதய குமார், விதுர விக்கிரமநாயக்க உள்ளிட்டோரும் முக்கியஸ்தர்களும் பங்கேற்றிருந்தனர். (பிரதீப் பத்திரண)

### பாராளுமன்றத்தை ஒரு வாரம்

## சஜித், அநுர அணிகள் புறக்கணித்தன

பா.நிரோஸ்



ஒவ்வொரு முறையும் பாராளுமன்றம் கூடும் போதும், மக்கள் தீர்வு கிடைக்கும் என்கிற எதிர்பார்ப்பில் இருக்கிறார்கள். ஆனால், பாராளுமன்றத்தை கூட்டுவதால் எந்தவிதமான தீர்வும் கிடைக்கவில்லை என தெரிவித்து சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் பாராளுமன்ற அமர்வுகளை புறக்கணிப்பதாக அறிவித்தனர்

தொடர்ச்சி P2

## ரணிலின் கூட்டங்களில் பங்கேற்க மாட்டேன்

பா.நிரோஸ்



பெருந்தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினை குறித்து பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரதமருடன் கலந்துரையாடியும் தீர்வு கிடைக்கவில்லை. ஆகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கூட்டங்களில் இனி தாம் ஒருபோதும் கலந்துகொள்ள போவதில்லை என தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று(21) விசேட கூற்றை முன்வைத்தே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2




## சேவைகள் அத்தியாவசியமாகின

மின்சாரம், பெற்றோலியம் மற்றும் வைத்தியசாலை சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்டுள்ளார்.

2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## தீர்வுத் திட்டமின்றேல் இழுத்து மூடுங்கள்

பா.நிரோஸ்



நெருக்கடி நிலைமைகளில் இருந்து நாட்டை எவ்வாறு மீட்பது என்ற திட்டத்தை அரசாங்கம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் எனத் தெரிவிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, நெருக்கடி நிலைமைகள் இருந்து நாட்டை மீட்பதற்கு தீர்வுத் திட்டம் இல்லை என்றால் பாராளுமன்றத்தை இழுத்து மூடி விட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்

பாராளுமன்றத்தின் நேற்றைய (21) அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய தயாசிறி, பாராளுமன்றம் கூடி நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

தொடர்ச்சி P2

### நெருக்கடியை சமாளிக்க பிரத்தியேகமாக

## 5.75 மில்லியன் டொலர்களை வழங்குகிறது அமெரிக்கா

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக அமெரிக்க அரசாங்கம் மூன்றாவது தவணைக்கான புதிய நிதியுதவியை நேற்று (21) அறிவித்தது. அதற்கமைய குறுகிய கால தொழில் மற்றும் நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நேரடியாக விதைகள் போன்ற விவசாயப் பொருட்களை வழங்கவென 5.75 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்கவிருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### ஒகஸ்ட், டிசெம்பரில்

## பாடசாலைகளின் விடுமுறை குறுகும்

கடந்த காலங்களில் விடுபட்ட பாடத்திட்டத்தை ஈடுகட்டும் வகையில், எதிர்வரும் ஒகஸ்ட் மற்றும் டிசெம்பர் மாதங்களில் வழங்கப்பட இருந்த பாடசாலை விடுமுறைகள் குறைக்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (21) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்று காலத்தில் இருந்த நிலைமையில் இருந்து இன்றைய நிலைமை வேறுபட்டுள்ளது என்று குறிப்பிட்ட அமைச்சர், பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் நெருக்கடியால்

தொடர்ச்சி P2

## அமர்வை நாங்கள் புறக்கணிக்கோம்

பா.நிரோஸ்

எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தை புறக்கணித்திருந்தாலும், எதிர்க்கட்சியில் அமர்ந்துள்ள சுயாதீனமாக இயங்கும் 11 கட்சிகளும் பாராளுமன்ற அமர்வை புறக்கணிக்கப் போவதில்லை என அறிவித்துள்ளன.

பாராளுமன்றத்தின் நேற்றைய

தொடர்ச்சி P2

### மே 09 வன்முறை விவகாரம்

## ஜோன்ஸ்டனின் ரிட் மனு தள்ளுபடி

காலிமுகத்திடல் கோட்டா கோகம மற்றும் அலரிமாளிகைக்கு முன்னால் அமைக்கப்பட்டிருந்த மைனா கோகம ஆகியவற்றில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து, சந்தேகநபராகக் கருதப்படும் தன்னைக் கைது செய்வதைத் தடுக்குமாறு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தாக்கல் செய்த ரிட் மனுவை, மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று (21) தள்ளுபடி செய்தது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக கணேபொல ஆகியோரடங்கிய அமர்வு முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, ரிட் மனு தாக்கல் செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில், மனுதாரரை கைது செய்ய நீதவான் நீதிமன்றத்தால்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு

பாராளுமன்றத்தில் நேற்று (21) குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் விசேட கூற்றொன்றை முன்வைத்த போதே இவ்வாறு எச்சரித்த அவர் மேலும் கூறுகையில்,

நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்கவேண்டும். இலங்கை பௌத்த நாடு என்றாலும் ஏனைய மதங்களுக்கும் உரிமைகளை வழங்கியுள்ளோம். நாட்டில் முஸ்லிம் பள்ளிவாசல்கள், இந்து கோவில்கள், கிறிஸ்தவ ஆலயங்கள் இருப்பதன் மூலம் இது உறுதியாகின்றது. ஆனால் நாங்கள் இவ்வாறு செயற்பட்டாலும் வடக்கில் பிரிவினைவாத அரசியல் தலைவர்கள் பௌத்தத்திற்கு கௌரவம் அளிப்பதில்லை.

கடந்த ஒருமாத காலத்துக்கு முன்னர் வடக்கில் நாகதீபத்தில் புத்தர் சிலை ஒன்றை அமைப்பதற்கு வடக்கின் முன்னாள் முதலமைச்சர் ஒருவர் எதிர்ப்பு தெரிவித்தார். இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகள் அங்கு தொடர்ந்து இடம்பெற்று வந்திருக்கின்றன. அதன் அடிப்படையிலேயே கடந்த வாரம் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் தலைமையில் வந்த குண்டர்களினால் முல்லைத்தீவு குருந்தூர்மலை சைத்தியில் தாதுகோபுரம் வைக்கும் நிகழ்வு தடுத்து நிறுத்தப்பட்டது. பௌத்த நாட்டில் புத்தசாசனத்தை வளர்ப்பதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எதிர்ப்பு தெரிவிப்பதாக இருந்தால் அது பாரிய பிரச்சினையாகும். இதுதொடர்பில் சபாநாயகர் கவனம் செலுத்தவேண்டும் என்றார்.

வடக்கு தமிழ் எம்.பிக்களின் இந்த நடவடிக்கையை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். வடக்கில் விடுதலைப்புலிகள் மக்களை கொலை செய்யும்போது கொழும்பில் தமிழ் மக்கள் தேர் இழுத்தார்கள். தமிழ் தேசிய கூட்டமைப்பு என்பது விடுதலைப்புலிகளின் கட்சி. பிரபாகரன் செய்த வேலைகளையா இவர்கள் செய்யப்பார்க்கின்றனர்? தமிழர்கள் எங்கும் வாழ முடியுமென்றால் சிங்களவர்களினாலும் எங்கும் வாழ முடியும். 52 வீதம் தமிழர்கள் சிங்கள இடங்களில்தான் வாழ்கின்றார்கள் என்பதனை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். எனவே சிங்கள பௌத்தர்களின் பொறுமையை இயலாமையாக நினைக்க வேண்டாம். சிங்கள பௌத்தர்களின் பொறுமைக்கும் எல்லை உண்டு என்றார்.

# கர்மவினை வாழ விடாது

கொதிக்கும் எண்ணெய் நிறைந்த தாச்சியில் ஒருவரை தூக்கிப்போட்டு வதை கொடுப்பதாகவும் படங்கள் உள்ளன என நினைவுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (21) இடம்பெற்ற குற்றவியல் நடவடிக்கை கோவை திருத்த சட்டமூல விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றம் சாட்டிய அவர் மேலும் கூறுகையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர்மலை எனும் தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக ஆதிசிவனை வழிபட்ட வாழ்விடத்தில், பிக்குகள் ஏதுமறியாத அப்பாவி சிங்கள மக்களை அழைத்து வந்து நூற்றுக்கணக்கான இராணுவம், பொலிஸார், கடற்படையின் பாதுகாப்போடு புத்த பகவானின் சிலையை வைப்பதற்கு முற்பட்டார்கள்.

கருணை, காருண்ணியம், அன்பு, சகோதரத்துவம் பற்றிக் கற்பித்த புத்த பகவானை, ஒரு யுத்த வடிவமாகவும் ஆக்கிரமிப்பின் வடிவமாகவும் சிலை நிறுவ முற்பட்டபோது, முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்தவர்கள், ஏனைய மாவட்டங்களிலிருந்து சென்ற தமிழர்கள், அங்கே ஒரு போராட்டத்தை நடத்தி அதனை தடுத்துள்ளார்கள்.

ஏற்கெனவே நீதிமன்றத்தின் தடை உத்தரவுள்ளது. இங்கே இரு மதம் சார்ந்தவர்களும் கட்டுமானப்பணிகள் எதனையும் செய்யக் கூடாது என்று முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவை மீறி, இந்த நாட்டிலே பிக்குகள், பொலிஸாரையும் வைத்துக்கொண்டு புத்த பகவானின் சிலையை நிறுவ முடியுமா? அப்படியானால் நீதிமன்றம் யாருடைய பக்கம் உள்ளது? நீதிமன்றத்தின் அதிகாரத்தை மீறும் உரிமையை பிக்குகளுக்கு யார் கொடுத்தது?

நீங்கள் குருந்தூர் மலையில் செய்யும் அநியாயம், நீங்கள் செய்யும் கர்ம வினைகள் உங்களை வாழ விடாது. செய்யும் பாவங்களுக்கு அவர் நரகத்துக்கு சென்றால் என்ன தண்டனை என பௌத்தம் சொல்கின்றது. இது தெரிந்துமா சிங்கள தலைவர்கள், பிக்குமார்கள் இந்த அநியாயங்களை செய்கின்றார்கள்? எனவே இந்தக் கர்ம வினைகளிலிருந்து நாடு தப்ப வேண்டுமானால் நீதிமன்றங்களின் கட்டளைகளை நிறைவேற்ற இந்த பாராளுமன்றம் கட்டளையிட வேண்டும் என்றார்.

# 5 மனுக்களும் தள்ளுபடி; இன்று சத்தியப்பிரமாணம்?

தனது நியமனத்தை சவாலுக்கு உட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுக்கள் மீதான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியாகும் வரையிலும் எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளமாட்டேன் என்றும் அமைச்சுப் பதவிகளையும் பொறுப் பேற்க மாட்டேன் என தம்மிக பெரேரா தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இன்றையதினம் (22) அவர் பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# இணக்கப்பாட்டை எட்ட முடியும்

வாய்ப்புகள் உள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் (20) முக்கிய கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன்போது இலங்கையின் கள நிலைவரங்கள் மற்றும் இலங்கை கண்டிப்பாக செய்ய வேண்டிய வேலைத்திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. இது குறித்து தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்டத்திலான இணக்கத்தை ஏற்படுத்த முடியும் எனவும், எதிர்காலத்தின் ஐ.எம்.எப்புடன் திட்டமிட்ட வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க முடியும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# அத்தியாவசிய, உயிர்காக்கும் மருந்துகள் தீர்ந்துவிட்டன

தற்போது சில அரச வைத்தியசாலைகளில் குறைந்த எண்ணிக்கையிலான மருத்துவ மருந்துகள் மட்டுமே உள்ளதாகவும் ஏனையவற்றின் கையிருப்பு வேகமாக தீர்ந்து வருவதாகவும் குறிப்பிட்ட அவர், இந்தப் பிரச்சினையை பல தனிநபர்களும் அமைப்புகளும் பல சந்தர்ப்பங்களில் ஊடகங்களில் எழுப்பியிருந்ததாக சுட்டிக்காட்டினார்.

இவ்விடயம் குறித்து நிபுணர்கள் கவலைப்படும் நிலையில், அரசு வைத்தியசாலைகளுக்குத் தேவையான அனைத்து மருந்துகளும் தம்மிடம் இருப்பதாக சுகாதார அமைச்சர் கூறியதாக டொக்டர் கொலம்பகே தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் கூறியது உண்மையாக இருந்தால், தற்போது விநியோக பிரச்சினை இருப்பதாக தாம் நம்புவதாக தெரிவித்த டொக்டர் கொலம்பகே, நாடு முழுவதும் உள்ள அந்தந்த வைத்தியசாலைகளுக்கு தேவையான மருந்து தொகுதிகள் வழங்கப்படுவதை உறுதி செய்வது சுகாதார அமைச்சரின் பொறுப்பாகும் என்றார்.

தேசிய கண் வைத்தியசாலையில் ஒரேயொரு நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்து மட்டுமே இருப்பதாகவும், வேறு மாற்று மருந்துகளை வழங்க முடியாத நிலையில் ஊழியர்கள் இருப்பதாகவும் தனக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

கையிருப்பு குறைவாக உள்ள அல்லது வேகமாக தீர்ந்துகொண்டிருக்கும் மருந்துகளின் பட்டியல் தங்களிடம் இருப்பதாகவும் எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# சஜித், அநுர அணிகள் புறக்கணித்தன

பாராளுமன்றத்தில் நேற்று (21) விசேட அறிவிப்புகளை விடுத்து உரையாற்றிய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, இந்நாட்டின் துன்பப்படும் மக்களின் அபிலாஷைகளையோ அல்லது இந்நாட்டின் பாரதூரமான வீழ்ச்சியைத் தடுக்கவோ, அல்லது இந்நாட்டை கட்டியெழுப்பும் எந்தவிதமான திட்டமும் இல்லாத அரசாங்கத்தைக் கொண்ட பாராளுமன்றத்தை புறக்கணிக்க தீர்மானித்துள்ளோம் என்றார். வரிசையில் நிற்கும் மக்கள் படும் துன்பகளை புரிந்து கொள்ளாத, பால் மா இன்றி தவிக்கும் குழந்தைகளின் துயரங்களை புரிந்து கொள்ளாத, திருடுவதற்கும் சுரண்டுவதற்கும் கை தூக்கும் பாராளுமன்றம் வெறும் கதையாடல் கடை மாத்திரமே எனவும் தெரிவித்தார்.

நாட்டை நெருக்கடி நிலைமைகளில் இருந்து மீட்பதற்கான எந்த ஒரு வேலைத்திட்டங்களும் பாராளுமன்றத்தில் இடம்பெறுவதில்லை என தெரிவித்து பாராளுமன்ற அமர்வை ஒரு வாரத்துக்கு புறக்கணிக்கப் போவதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க சபைக்கு அறிவித்தார். நாட்டில் நெருக்கடி நிலைமைகள் ஏற்பட்டதன் பின்னர் பல மாதங்களாக பாராளுமன்றம் கூடி இருந்தது. எனினும் பாராளுமன்றத்துக்குள் பேசப்பட்ட எந்த ஒரு விடயங்களாலும் நாட்டு மக்களின் வாழ்வாதாரம் துளியளவேனும் உயரவில்லை எனவும் தெரிவித்தார்.

# ரணிலின் கூட்டங்களில் பங்கேற்க மாட்டேன்

தற்போதைய அரசாங்கமானது அலங்கோலமான, கேவலமான, முட்டாள்தனமான, அயோக்கியத்தனமான அரசாங்கமேயாகும். தான் பிரதமர் பதவியை பெறவில்லை, தன்னை அழைத்தே ஜனாதிபதி பதவி வழங்கினார் என ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். ஆனால் விமல் வீரவன்சவோ ரணில் பெயரை சில தரப்பினர் பெயரிட்டதாக கூறியுள்ளார்.

இதேவேளை ஒரே விடயத்திற்கு ஜனாதிபதியும் பிரதமரும் வெவ்வேறாக அழைப்பு விடுத்து அதிகாரிகளுடன் கலந்துரையாடுகின்றனர். இவர்கள் முட்டாள் தனமான அரசாங்கத்தையே நடத்திக்கொண்டு இருக்கின்றனர்.

கொழும்பு மாவட்டத்தில் மக்கள் பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், எரிவாயு இன்றி கஸ்டப்படுகின்றனர். மலைநாட்டில் தோட்டத் தொழிலாளர்கள் கஸ்டப்படுகின்றனர். தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளத்தை கூட்டுங்கள். இல்லையென்றால் அங்கு பயிரிடப்படாத காணிகளை வழங்குங்கள். இது தொடர்பில் நான் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளேன். அவரின் கூட்டத்திற்கும் சென்றுள்ளோம். இன்னும் தீர்வு கிடைக்கவில்லை. இனிமேல் ஒருபோதும் பிரதமரின் கூட்டத்திற்கு செல்ல மாட்டோம். அது வெறும் ஏமாற்று வேலையே என்றார்.

# 5.75 மில்லியன் டொலரை வழங்குகிறது அமெரிக்கா

அமெரிக்காவால் இலங்கைக்கு வழங்கப்படும் மூன்றாவது கட்ட நிதியுதவி இதுவாகும். இதற்கு முன்னர் , இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும், தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையை சமாளிப்பதற்கும், அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபையின் ஊடாக 120 மில்லியன் அமெரிக்க டொலர் கடனாகவும், அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி முகவர் அமைப்பின் ஊடாக 6 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியாகவும் வழங்குவதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தீர்வுத் திட்டமின்றேல் இழுத்து மூடுங்கள்

ஆனால், பாராளுமன்றம் வெறும் பேச்சுக்களுக்கான இடமாகவே இருக்கிறது. ஒவ்வோர் அமர்வு கூடும்போதும் மக்கள் தீர்வு கிடைக்கும் என எதிர்பார்க்கிறார்கள். ஒன்று நெருக்கடி நிலைமைகளை தீர்த்துவிட்டு பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டும். அல்லது நெருக்கடி நிலைமைகள் தீரும் வரையில் பாராளுமன்றத்தை மூட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

எரிவாயுவை கொள்வனவு செய்வதில் 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் கொள்ளையடித்ததாக ஜனாதிபதி சட்டத்தரணி நாகானந்த கூறுகிறார். நாம் எந்தவிதமான டீல்களையும் செய்யவில்லை. இது தொடர்பில் அமைச்சரவையும், பிரதமரும் விளக்கமளிக்க வேண்டும். இதற்கு பதிலளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நாட்டின் நெருக்கடி நிலைமைகளில் இருந்து நாட்டை எவ்வாறு மீட்பது என்கிற தீர்வு திட்டத்தை அரசாங்கம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும். அவ்வாறு செய்யவில்லை என்றால் பாராளுமன்றத்தை இழுத்து மூடிவிட்டு பேசாமல் இருக்க வேண்டும். அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்றால், முறையான சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைக்க வேண்டும் எனவும் இதன்போது தெரிவித்தார்

# சேவைகள் அத்தியாவசியமாகின

மின்சாரம் வழங்கல் தொடர்பான சகல சேவைகளும், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் எரிபொருள் வழங்கல் அல்லது விநியோகம் ஆகிய சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வைத்தியசாலைகள், நேர்சிங் ஹோம்கள், மருந்தகங்கள் மற்றும் அது போன்ற ஏனைய நிறுவனங்களில் நோயாளர்களின் பராமரிப்பு மற்றும் வரவேற்பு, பாதுகாப்பு, போசாக்கூட்டல் மற்றும் சிகிச்சை அளித்தல் ஆகியவை தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது தேவைப்படும் எந்த வகையிலான சகல சேவைகள், வேலைகள் அல்லது தொழில் பங்களிப்பு ஆகியனவையும் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் ஜனாதிபதி தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் வர்த்தமானியை வெளியிட்டார்.

# வெளிப்படை தன்மை அவசியம்

எந்தவொரு நேரத்திலும் வெளிநாட்டு நாணய நிறுவனத்தின் கடன் உதவிகள் தொடர்பில் வெளிப்படைத் தன்மையில்லாத கொள்கையை எந்தவொரு நாட்டிலும் அனுமதிக்க முடியாது. எந்தவொரு நாடும் இன்னொரு நாட்டுக்கு கடன் வழங்கம் போது, அந்நாட்டு மக்களின் வரிப் பணத்திலேயே கடனை வழங்குவதால், அந்த நாட்டு அரசாங்கம் அந்த நாட்டு மக்களுக்க பதில் கூற கடமைப்பட்டுள்ளது. எனவே நிதி நிறுவனங்கள், வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் நிதியுதவிகள் தொடர்பில் வெளிப்படைத்தன்மையற்ற கொள்கை கொண்ட நாடு இருக்குமாயின் அந்த நாட்டுக்கு எந்த நாடும் கடன் வழங்காது. அதுதான் உலக நாடுகளின் கடன் வழங்கும் முறையாகும் என தெரிவித்த அவர்,

அவர்களால் வழங்கப்படும் கடன் உதவிகள் குறித்து, அவர்கள் கண்காணிப்பர். உதாரணமாக சுனாமியின் போது கிடைத்த அவசர நிதியுதவி உரிய முறையில் பயன்படுத்தப்பட்டதா இல்லையா என்பது தொடர்பில் சர்வதேச ஆய்வுகளை செய்து, அது தொடர்பான சில செயற்றிட்டங்களை இடைநிறுத்தினர். எனவே,வெளிநாட்டு உதவிகள் அல்லது வெளிநாட்டு செலாவணியை கொண்டு வருவது தொடர்பில் உண்டியல் முறையை தவிர்த்து, ஏனைய சகல சர்வதேச முறைகளும் உரிய முறையில் குறிப்பிடப்படும் என்றார்.

# பாடசாலைகளின் விடுமுறை குறுகும்

தற்போதைய பிரச்சினைகள் உருவாகிவருகின்றன என்றார்.

ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி அமர்வுகள் ஜூலை மற்றும் செப்டெம்பர் மாதங்களில் நடத்தப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

உயர்தர மாணவர்களுக்கான திருத்த வகுப்புகள் உட்பட மேலதிக நிகழ்ச்சித் திட்டங்கள் மேலும், செப்டம்பர், ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் ஏற்பாடு செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

வார இறுதிக்குள் எரிபொருள் நெருக்கடி ஓரளவுக்குத் தீர்க்கப்படும் என்றும் கல்வி அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# அமர்வை நாங்கள் புறக்கணியோம்

அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நாட்டை நிர்வகிப்பதற்கு ஓர் அரசாங்கம் இருக்கவேண்டும். நாட்டின் நெருக்கடி நிலைமைகளை தீர்ப்பதற்கான பதில் அரசாங்கத்திடம் இல்லை. பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டியது அனைவரது கடமையும் கூட. எனினும், ஆளுந்தரப்பினரே இதற்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்றார்.

எனவே, அமைச்சுப் பதவிகளில் தொடர்ந்து ஆளும் தரப்பினர் இருப்பதில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. உண்ணுவதற்கு உணவில்லாத விவசாய அமைச்சு எதற்கு? பிள்ளைகளுக்கு கல்வியை வழங்க முடியாத கல்வி அமைச்சு எதற்கு? எனவும் கேள்வி எழுப்பினார்.

அரசாங்கம் பொறுப்பற்ற வகையில் செயல்படுகிறது என்கிற நிலைப்பாட்டில் நாம் இருக்கிறோம். ஆனாலும், இவற்றை பாராளுமன்றத்திலேயே சுட்டிக் காட்ட முடியும். எனவே பாராளுமன்றத்தைப் புறக்கணித்துவிட்டு ஒரு வார விடுமுறை எடுப்பதற்கு நாம் தயாரில்லை எனவும் விமல் வீரவன்ச சபைக்கு அறிவித்தார்.

# ஜோன்ஸ்டனின் ரிட் மனு தள்ளுபடி

பிடியாணை பிறப்பிக்கப்படவில்லை என்று நீதியரசர்கள் அமர்வு சுட்டிக்காட்டியது.

சாத்தியமான குற்றத்தில் தனக்கு எதிராக எந்த சந்தேகமும் இல்லை என்று மனுதாரர் வாதத்தை எழுப்புவது நியாயமானது அல்ல என்றும் அலரிமாளிகையில் மனுதாரர் செய்த உரையை ஆராய்ந்து, மனுதாரர் குற்றம் செய்தாரா என்பது குறித்து தீர்மானிக்க நீதவான் சிறந்த நபர் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் கருதுகிறது என்றும் அறிவிக்கப்பட்டது.

சட்டமா அதிபரின் தீர்மானங்களிலும் முதன்மையான பார்வையிலும் அப்பட்டமான பிழைகள் எதுவும் இல்லை என்பதால், தனது அதிகாரத்தை சட்டமா அதிபர் மீறியதாகக் காட்டுவதற்கு எவ்வித ஆதாரமும் கிடைக்கவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

மனுதாரர் குறைந்தபட்ச காரணங்களை பூர்த்தி செய்யாதமையால் மனுவை தள்ளுபடி செய்வதாக அறிவிக்கப்பட்டது.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

## அமர்வு நாள் குறைப்பு

இவ்வாரத்துக்கான பாராளுமன்ற அமர்வு நாள்கள் குறைக்கப்பட்டுள்ளன. அது தொடர்பில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், இன்றைய (22) தினம் மட்டுமே பாராளுமன்றம் நடைபெறும். நாட்டில் ஏற்பட்டிருக்கும் எரிபொருள் நெருக்கடி நிலைமையைக் கருத்தில் கொண்டே இவ்வாறான தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

## இவர்களே ரணிலை பிரதமராக்கினர்

### சபையில் போட்டுடைத்தார் விமல் வீரவன்ச

பா.நிரோஸ்



பிரதமர் பதவிக்கு ரணிலை நியமிக்க வேண்டுமென ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியும், ஆளுங்கட்சியைச் சேர்ந்த நிமல் லன்சா குழுவினருமே ஜனாதிபதிக்கு யோசனை கூறி, ஜனாதிபதியை தவறாக வழி நடத்தியதாக சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச சபையில் குற்றம் சுமத்தினார்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி உள்ளிட்ட 11 கட்சிகள் சுயாதீனமாக இயங்குவதற்கு தீர்மானித்தோம். எனினும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த சிலரும் நிமல் லன்சா உள்ளிட்ட சிலரும் இரகசியமாக இரவில் ஜனாதிபதியை சந்தித்து, பிரதமர் பதவிக்கு ரணிலை நியமிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இவர்களே ஜனாதிபதியை தவறாக வழிநடத்தி ரணிலுக்கு பிரதமர் பதவியைப் பெற்றுக்கொடுத்தார்கள். ரணில் பிரதமரானதும் நாட்டுக்கு 5,6 பில்லியன்களை கொண்டுவருவார் என்கிற எதிர்பார்ப்பு பொய்யென நிரூபிக்கப்பட்டு விட்டது எனவும் தெரிவித்தார்.

சர்ச்சைக்குரிய இப்பேச்சால், நிமல் லன்சாவுக்கும் விமலுக்கும் சபையில் நேற்று (21) கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்க வேண்டும் எனத் தாம் கோரிக்கை விடுக்கவில்லை என இதன்போது கூறிய பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த ஒருவரையே பிரதமராக நியமிக்க ஜனாதிபதியிடம் யோசனை முன்வைத்ததாகவும் கூறினார். ஜனாதிபதியை நான் சென்று சந்திக்கவுமில்லை. பிரதமர் பதவிக்கு நான் யாரையும் முன்மொழியவுமில்லை எனவும் தெரிவித்தார்.

## லீசிங் பிரச்சினையை தீர்க்க பிரதமர் தலையிட வேண்டும்



லீசிங் பெற்றுள்ளவர்கள் தற்போது பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதால் அவர்களுக்கு நிவாரணம் ஒன்றை அறிவிக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென முன்னாள் அமைச்சரும் எம்.பியுமான நாமல் ராஜபக்ஷ சபையில் கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் கூறுகையில், எரிபொருளுக்கான தட்டுப்பாட்டால் லீசிங் பெற்றுள்ளவர்கள் தற்போது பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். இதன் ஒரு வெளிப்பாடாகவே கண்டியில் லீசிங் விடயத்தில் வர்த்தகர் ஒருவர் உயிரிழந்துள்ளார். எனவே, அவர்களுக்கு நிவாரணம் அளிக்க நிதியமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

## திருட்டு அரசாங்கத்துக்கு துணைபோக மாட்டோம்

கேவலம் கெட்ட திருட்டு அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு துணைபோக மாட்டோம் என்றும், அரசாங்கத்திற்கு எதிராக மக்களுடன் வீதிகளில் இறங்கி போராட்டங்களில் ஈடுபடுவோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.



பாராளுமன்றத்தில் நேற்று (21)விசேட உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனை தெரிவித்துள்ளார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் இந்தச் சபையில் கூட்டத்தை நடத்தும் இந்த நேரத்தில், நாட்டில் பேரவலங்கள் உருவாகியுள்ளன. தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு 220 இலட்சம் மக்களும் பெரும் துன்பத்தில் இருக்கின்றனர். மக்களின் கோரிக்கைகளுக்கு எந்தத் தீர்வும் இல்லை. பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் வரிசைகள் அவ்வாறே தொடர்கின்றன. அரசாங்கம் மாறிய பின்னர், அந்த வரிசைகள் அதிகரித்துள்ளன.

இந்த ஜனாதிபதி - பிரதமர் தலைமையிலான அரசாங்கம் படுதோல்வியடைந்துள்ளது. மக்களின் பிரச்சினைகளுக்கு எந்தத் தீர்வும் முன்வைக்க வில்லை. மக்களின் முன் பிரச்சினைகளை முன்வைக்கும் அரசாங்கமே இப்போது இருக்கின்றது. மக்களுக்கு இந்தத் துன்பங்களை தாங்கிக்கொள்ள முடியாது. இரண்டரை வருடங்களாக செயற்பட்ட தூர நோக்கு சிந்தனைகள் இல்லாத சர்வாதிகார ஆட்சியின் பிரதிபலன்களே இவை.

பாரிய மக்கள் ஆணையுடன் பொதுஜன பெரமுன அரசாங்கம் அமைக்கப்பட்டது. சௌபாக்கிய நோக்கு இன்று அசௌபாக்கிய நோக்காக மாறியுள்ளது. இன்று மக்களுக்கு உணவு இல்லை; வைத்தியசாலைகளில் மருந்துகளும் இல்லை. சத்திரச் சிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

கேவலம் கெட்ட திருட்டு அரசாங்கமே இது, தலைகளை மாற்றிக்கொண்டு பெரியவர்கள் சுகபோகம் அனுபவிக்கின்றனர். நாங்கள் இப்போது பாராளுமன்ற கூட்டத்தை நடத்துவதன் ஊடாக 220 இலட்சம் மக்களுக்கும் கிடைக்கும் நன்மை என்ன? வாழ்க்கைச் செலவு வானை எட்டியுள்ளது. இது புரியவில்லையா? நாங்கள் மக்களுடன் வீதிகளில் அமர்ந்துகொள்வோம். நாங்கள் அன்றும் இருந்தோம், நேற்றும் இருந்தோம் எதிர்காலத்திலும் மக்களுடன் இருப்போம் என்றார்.

### அதிகாரிகள் தெரிவிக்கும் கருத்துக்கள் தொடர்பில்

## சத்தியப்பிரமாணம் பெற தீர்மானம்




அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு (கோப் குழு) அழைக்கப்படும் அதிகாரிகள் தெரிவிக்கும் கருத்துகள் தொடர்பில் குழுக் கூட்டம் ஆரம்பிக்கும்போதே சத்திரயப்பிரமாணம் பெற்றுக் கொள்ள குழு உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் கூடிய விசேட கோப் குழுக் கூட்டத்தில் நேற்று (21) தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய கோப் குழுவிற்கு வருகைதரும் அதிகாரிகள் குழுவின் கூட்டம் ஆரம்பிக்கப்பட முன்னர் தாம் தெரிவிக்கும் கருத்துகள் பிழையற்றவை என சத்தியப்பிரமாணம் செய்துகொள்வர். பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தலைமையில் நடைபெற்ற கோப் குழுக் கூட்டத்திலேயே இந்த விசேட தீர்மானம் எடுக்கப்பட்டது.

2022.06.10ஆம் திகதி கோப் குழு முன்னிலையில் ஆஜராகித் தெரிவித்த கருத்தை நீக்கிக் கொள்வதாக இலங்கை மின்சார சபையின் தலைவராக அப்போது கடமையாற்றியிருந்த எம்.எம்.சி.பேர்டினாந்து அனுப்பிய 2022.06.11ஆம் திகதிய கடிதம் கோப் குழுவின் தலைவரால் இன்று அங்கு சமர்ப்பிக்கப்பட்டது. இங்கு கருத்துத் தெரிவித்த கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத், “2022.06.11ஆம் திகதி இலங்கை மின்சார சபையின் தலைவரால் கோப் குழுவுக்கு அனுப்பப்பட்ட கடிதம் இன்று ஆராயப்பட்டது. கடிதத்துக்கு அமைய முக்கியமான கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் அதனுடனான இணைப்புகள் கவனத்தில் கொள்ளப்பட்டன. முன்னாள் தலைவர் எம்.எம்.சி. பேர்டினாந்தை மீண்டும் குழு முன்னிலையில் அழைத்துக் கலந்துரையாடுவதற்கு கோப் குழுவில் முடிவு எடுக்கப்பட்டது. இதன் மூலம் அவருடன் கலந்துரையாடி, இந்தக் கடிதத்தின் உள்ளடக்கங்களை மீள் நிர்ணயம் செய்து, அவர் கோரியிருந்த அவரது சாட்சியத்தின் ஒரு பகுதியை நீக்குவது தொடர்பான முடிவை எடுக்க முடிவு செய்தோம்” என்றார்.

### பாராளுமன்றத்துக்கான செலவுகளை வழங்கினால்

## மலையக மக்களுக்கு உணவளிப்போம்



பாராளுமன்ற அமர்வுக்கான செலவுகளை எம்மிடம் வழங்குங்கள். அதனைக் கொண்டு மலையக மக்களுக்கு உணவளிக்கிறோம் என பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் சபையில் தெரிவித்தார். இருநூறு வருடங்களாக நாட்டுக்கு டொலரைக் கொண்டு வந்த மலையக மக்கள், இன்று பட்டினியால் வாடுகிறார்கள். நாட்டு மக்களுக்கு மின்சாரம், எரிவாயு, எரிபொருள் என எதுவும் இல்லை. எனவே இந்தப் பாராளுமன்றத்தால் பிரயோசனம் இல்லை எனவும் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

## உதவிகளை மீள்பரிசீலனை செய்க



தமிழ் மக்களைத் திட்டமிட்டு அழிப்பதற்கான வேலைத்திட்டங்கள் வடக்கு-கிழக்கில் முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்த கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், இலங்கைக்கு உதவும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் இதனை தெரிந்து கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்திருக்கும் நிலையிலும்கூட, தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பு செயற்பாடுகளை அரசாங்கம் நிறுத்தவில்லை. பௌத்த மதத்தை திணிப்பதற்கு தொல்பொருள் திணைக்களத்தைப் பயன்படுத்தக்கூடாது. அதனை ஒரு நிறுவனமாக பயன்படுத்த வேண்டும். அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொண்டிருக்கிற தமிழர்களும் சிங்கள மயமாக்கலை கீழ்த்தரமாக பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்காக நாம் வெட்கப்பட வேண்டும். இலங்கைக்கு உதவ முன்வர உள்ள சர்வதேச நாடுகள் தங்களது உதவிகளை மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்றார்.

### ஜனாதிபதியின் அதிகாரங்களை ஒழித்தால்

## சமஷ்டி ஆட்சி உருவாகும்



நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழித்தால் நாட்டில் சமஷ்டி ஆட்சி அமையும் என சரத் வீரசேகர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கில் சிங்களவர்கள் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்தால் ஒன்பது மாகாண சபைகளின் அதிகாரங்களும் அந்தந்த ஆளுநர்களின் கைகளுக்கு செல்லும். இதனால் நாட்டில் சமஷ்டி ஆட்சி அமைக்கப்படும் எனவும் எச்சரித்தார். எரிபொருள் வரிசைகளுக்காக நீண்ட நாள்களாக வரிசையில் காத்திருப்பர்களைப் பார்க்கும்போது கவலையளிக்கிறது. இவர்கள் எப்போது கொந்தளித்து எழுவார்கள் என்கிற பயமும் ஏற்பட்டுள்ளது என்றார்.

### 21ஐ

## சர்வஜன வாக்கெடுப்பின்றி நிறைவேற்ற முடியும்



ஐக்கிய மக்கள் சக்தியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 21ஆவது திருத்தச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என உயர் நீதிமன்ற வியாக்கியானம் வழங்கியுள்ளதாக சபையில் தெரிவித்த நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, அரசாங்கம் கொண்டுவரவுள்ள 21ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியமில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

21ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என எதிர்க்கட்சி கூறுகிறது. எனவே அரசாங்கம் கொண்டுவரவுள்ள இச்சட்டமூலத்துக்கு எதிர்க்கட்சியினர் ஆதரவளிக்க வேண்டும் எனவும் நிதியமைச்சர் சபையில் கோரிக்கை விடுத்தார்

அமைச்சுப் பதவியின் மீது உள்ள ஆசையால் பதவியை பெறவில்லை. ஜனாதிபதியும், பிரதமரும் அரசியல் மறுசீரமைப்பு ஒன்றை நாட்டில் ஏற்படுத்த வேண்டும் என நினைத்து அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாறு எனக்கு அழைப்பு விடுத்தனர். இந்த அழைப்பை ஏற்றே நான் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டேன்.

சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களுடன் கலந்துரையாடும் போது இலங்கையில் ஜனநாயகத்தன்மை எங்கேஎன்றே கேள்வி எழுப்புகிறார்கள். ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் உறுதி செய்வதற்கு 21ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வருவதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம்.

நடைமுறையில் சாத்தியப்பட கூடியவற்றை நாம் செய்கின்றோம் எனவும் கூறினார்.

உடனடிச் செய்திகளைத் தமிழ் மொழியில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணைந்திருங்கள்
தமிழ்Mirror
பதிவு செய்வதற்கு
Dialog Type TM and send to 87798 Daily Rs.1/=+TAX
HUTCH Type TM and send to 2233 Monthly Rs.30/=+TAX
SLTMOBITEL Type REG TM and send to 77012 Daily Rs.1/=+TAX

ஊத்துமடு கசிப்பு விவகாரம்:

# 6 பெண்கள் உட்பட 12 பேர் கைதாகினர்

■ கனகராசா சரவணன்



மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள ஊத்துமடு, பாவக்கொடிசேனை பிரதேசத்தில் கசிப்பு விற்பனை செய்துவரும் வீடொன்றை திங்கட்கிழமை (20) முற்றுகையிட்டு, கசிப்பு வியாபாரியை கைது செய்ய முற்பட்ட போது, அங்கிருந்த குழுவொன்று பொலிஸார் மீது மேற்கொண்ட தாக்குதலில் ஒருவர் காயமடைந்தார்.

அதன்பின்னர், பொலிஸ் வாகனத்தை உடைத்து சேதப்படுத்திய சம்பவம் தொடர்பாக 6 பெண்கள் உட்பட 12 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி. நிசந்த அப்புகாமி தெரிவித்தார்.

சம்பவ தினம் காலை 11 மணியளவில் குறித்த வீட்டை முற்றுகையிட்டு அங்கு கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இளைஞன் ஒருவரை 2 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்புடன் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்த இளைஞனை ஜீப்வண்டியில் ஏற்றுவதற்கு பொலிஸார் முற்பட்டபோது, அவ்விளைஞனின் சகோதரி உட்பட உறவினர்கள் கொண்ட குழுவினர் அவரை ஜீப் வண்டியில் ஏற்றவிடாது, பொலிஸாரை தடுத்தனர்.

இதன் போது பொலிஸாருக்கும், அவர்களுக்கும் இடையே இழுபறி இடம்பெற்றுக் கொண்டிருந்தது. அவ்விளைஞனும் அங்கிருந்து தப்பியோட முயற்சித்துள்ளார். எனினும், பொலிஸார் சுற்றிவளைத்து மீண்டும் பிடித்தனர்.

குறித்த இளைஞனை ஜீப் வண்டியில் ஏற்றிய நிலையில், பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்டதில் பொலிஸார் ஒருவர் காயமடைந்ததுடன், ஜீப் வண்டியின் கண்ணாடி உடைந்து சேதமடைந்தது.

இதனையடுத்து காயமடைந்த பொலிஸை மட்டு.போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இதன் பின்னர் பொலிஸார் கடமையை செய்யவிடாது, தடுத்த மற்றும் பொலிஸாரின் ஜீப் வண்டியை உடைத்து சேதப்படுத்திய 6 பெண்கள் உட்பட 12 பேரை கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்வர்களை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதையடுத்து அவர்களை எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட இளைஞன் ஏற்கெனவே கசிப்பு கடத்தல் மற்றும் வியாபாரத்தில் ஈடுபட்ட இரு சம்பவங்களில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு, ஒரு வழக்கில் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்தியதுடன், மோட்டார் சைக்கிளில் கசிப்பு கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வழக்கில் நீதிமன்றம் மோட்டார் சைக்கிளை பறிமுதல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குடும்பத் தகராறில் ஒருவர் மரணம்

■ எப்.முபாரக்



திருகோணமலை, புல்மோட்டை பகுதியில் குடும்பத் தகராறில் ஏற்பட்ட கைகலப்பில் அரபாத் நகர் பகுதியைச் சேர்ந்த ஏ.ஜீ. சதாம் (28 வயது) உயிரிழந்துள்ளார்.

குடும்பத்தகராறு காரணமாக மனைவியின் சகோதரர் திங்கட்கிழமை(20) இரவு தாக்கியதிலேயே குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

சம்பவத்தின் போது படுகாயமடைந்தவர் புல்மோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதை அடுத்து, மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று (21) காலை உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# எரிபொருள் கேட்டு மக்கள் ஆர்ப்பாட்டம்

■ எப்.முபாரக்





திருகோணமலை மாவட்டம், கந்தளாய் பிரதேசத்தில் எரிபொருள் வழங்க கோரி மக்கள் நேற்று (21) போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

கந்தளாய் 91 ஆம் கட்டைப்பகுதியின் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்திருந்த வேளையில், எரிபொருள் இல்லையென்று கூறியதையடுத்து, மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

எரிபொருள் பௌசரை மறித்து, போராட்டத்தில் ஈடுபட்டார்கள். பின்பு எரிபொருள் நிலைய உரிமையாளருக்கும், பொதுமக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. அதனையடுத்து, சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸாரும், இராணுவத்தினரும் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அதன் பின்னர், எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.

# லாப் விநியோகம் இடைநிறுத்தம்

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு கடந்த ஒரு மாதத்திற்குப் பின்னர் லாப் சமையல் எரிவாயு நேற்று (21) கொண்டு வரப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

ஓட்டமாவடி உட்பட பல இடங்களில் எரிவாயு விநியோகிக்கப்பட்ட நிலையிலும், ஆரையம்பதியில் எரிவாயு பெற வந்திருந்தவர்கள் குழப்பம் விளைவித்ததன் காரணமாக விநியோகம் இடை நிறுத்தப்பட்டது. ஆரையம்பதியிலுள்ள லாப் சமையல் எரிவாயு விநியோகஸ்தர் அலுவலகத்துக்கு முன்பாக பொது மக்கள் நீண்ட வரிசையில் நேற்று முன்தினம் மாலை முதல் காத்து நின்றிருந்தார்கள். எனினும், இன்னொரு பிரதேசத்துக்கு எரிவாயு சிலிண்டர்கள் எடுத்துச் செல்லப்பட்டன. அதனை அங்கிருந்தவர்கள் தடுத்துநிறுத்தினர்.

இதனால் பதற்றமான நிலைமை ஏற்பட்டது. பொலிஸாரும் இராணுவத்தினரும் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். எனினும், லாப் சிலிண்டர் விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.





எரிபொருள் நிரப்பு நிலையங்களை

# கண்காணிக்க நடவடிக்கை

■ எஸ். பாஸ்கர்



முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களும் அந்தந்த பிரதேச செயலகங்களின் கண்காணிப்பின் கீழ் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த எரிபொருள் நிலையங்களுக்கான எரிபொருள் வருகை தொடர்பான விடயங்கள் முகாமையாளரால் முன்கூட்டி பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுவர். எரிபொருள் வருகை மற்றும் விநியோகம் முதலிய தரவுகள் உத்தியோகத்தர்களால் பார்வையிடப்பட்டு அறிக்கையிடுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறித்த விடயங்கள் அங்கு கடமையில் ஈடுபடும் பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கும் அறிவிக்கப்படும்.

திணைக்களம் சார்ந்த உத்தியோகத்தர்கள் அந்தந்த திணைக்கள தலைவர்கள் ஊடாக குறித்த பிரதேச செயலகத்துக்கு விண்ணப்பித்து எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும்.

குறித்த விசேட பங்கீட்டு அட்டைகள் ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் தனித்துவ நிறங்களில் வழங்கப்பட உள்ளதுடன் இதனை பயன்படுத்தி வசிப்பிட பதிவுள்ள இடத்திலேயே எரிபொருளை பெறமுடியும். இந்த அட்டையை நடைமுறைப்படுத்தும் பிரகாரமே சமையல் எரிவாயு விநியோகமும் பின்பற்றப்படும்.

மேலும், இரவு வேளைகளில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முரண்பாடுகள் ஏற்படுகின்றமையை முகாமையாளர்கள் சுட்டிக்காட்டினர். இது தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டு இரவு 8 மணியுடன் விநியோகத்தினை இடைநிறுத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

# தவறுக்கு வருந்துகின்றோம்

ஜூன் 21 ஆம் திகதி நான்காம் பக்கத்தில், 'வழிப்பறி கள்வர் மடக்கிப்பிடிப்பு' எனும் தலைப்பின் கீழான செய்தியின் கீழிருக்கும் புகைப்படத்துக்கும் அந்த செய்திக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை. இதனால் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கும் தவறுக்கும் வருந்துகின்றோம்.

அந்தப் படத்தில் இருப்பவர்கள், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த முக்கிய ஊடகவியலாளர்கள் ஆவர். பொலிஸ் நிலையத்துக்கு செய்தி சேகரிப்பதற்காக சென்றிருந்த போது சில காலங்களுக்கு முன்னர் பிடிக்கப்பட்ட படமாகும். (ஆர்)

இனப்படுகொலைக்கு எதிரான

# தீர்மானம் நிறைவேற்றம்

■ நிதர்ஷன் வினோத்



நல்லூர் பிரதேச சபையில், இனப்படுகொலைக்கு எதிரான தீர்மானம், நேற்று (21) நிறைவேற்றப்பட்டுள்ளது.

கனேடிய பாராளுமன்றத்தில், இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலைதான்; அதற்கு நீதி கிடைக்க வேண்டும்; குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்ற தீர்மானத்தையும் பிரதேச சபை வரவேற்றது.

அந்தத் தீர்மானம். தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் அ.மதுசூதனால், நல்லூர் பிரதேச சபையில் நேற்று (21) கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# சிறுபோக அறுவடைக்கு எரிபொருள் வேண்டும்

■ நடராசா கிருஸ்ணகுமார்



கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கை அறுவடைக்கு எரிபொருளினைப் பெற்றுத் தருமாறு மாவட்டத்தின் கமக்கார அமைப்புகள் கிளிநொச்சி மாவட்டச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

விவசாயிகளால் ஏக்கர் ஒன்றிற்கு 15 லீற்றர் எரிபொருளினைப் பெற்றுத் தருமாறும் 10 லீற்றர் எரிபொருள் அறுவடை இயந்திரத்திற்கும் 05 லீற்றர் எரிபொருள் நெல் மூடைகளை ஏற்றி இறக்கும் உழவு இயந்திரத்திற்கும் தேவையென மாவட்டச் செயலாளரிடம் கையளிக்கப்பட்ட மனுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன.



# தங்கம் வென்ற யுவதிக்கு கௌரவிப்பு

■ செ.கீதாஞ்சன்

இந்தியாவில் நடைபெற்ற மிக்ஸ் பாக்சின்கில் தற்காப்பு கலை போட்டியில் தங்கம் வென்ற மாங்குளத்தைச் சேர்ந்த செல்வி ஜெகதீஸ்வரன் விஜிதாவுக்கு மாங்குளத்தில் பெரும் கௌரவிப்பு அளிக்கப்பட்டத.

மாங்குளம் பிள்ளையார் ஆலய முன்றலில் இருந்து மாங்குளம் சந்தி வரை ஊர்வலமாக அழைத்து வரப்பட்ட விஜிதா, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்

# இணைந்து செயற்படுங்கள்

■ நிதர்சன் வினோத்

வடமாகாணத்தில் கிடைக்கப் பெறுகின்ற எரிபொருட்களை பகிர்ந்தளிப்பதற்கு உள்ளூராட்சி மன்றங்கள், அரச முகவர்கள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினருடன் ஒன்றிணைந்து செயற்படுமாறு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வேண்டுகோள் விடுத்தார்.

வரிசையில் நிற்கும் போது ஒத்துழைப்பின்மை காரணமாக பிரச்சினைகள் எழுகின்ற நிலையில் எரிபொருளை வழங்க முடியாத சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் சீராக கிடைக்கும் வரை கிடைக்கக்கூடிய எரிபொருட்களை பகிர்ந்தளிக்க அரச திணைக்களங்களுடன் இணைந்து பொதுமக்கள் குழப்பமின்றி பெற்றுக் கொள்ள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.



சமையல் எரிவாயு சிலிண்டரை

# அதிக விலைக்கு விற்றவர் சிக்கினார்

ராமு தனராஜா

ஹாலிஎல, போஹாமலித்த பகுதியில் அதிக விலைக்கு எரிவாயு சிலிண்டர்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் 40 வயதானவர் நேற்றைய தினம் (21) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பதுளை நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள், ஹாலி எல பொலிஸார் இணைந்து, நடத்திய சோதனை நடவடிக்கையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் சந்தேகநபரிடம் இருந்து 18 எரிவாயு சிலிண்டர்கள் கைப்பற்றியதாக பொலிஸ் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை பதுளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் நடவடிக்கைகளை ஹாலிஎல பொலிஸார், மேற்கொண்டு வருகின்றனர்.

# 60 வருடங்கள் ஓடிய பஸ் இடைநிறுத்தம்

## பயணிகள் அவதி

செ.தி பெருமாள்

ஹட்டன் இ.போ.ச டிப்போ மூலம், சாமிமலை நகரில் இருந்து கண்டிக்கு முன்னெடுக்கப்பட்டு வந்த பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டதால், பயணிகள் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

குறித்த பஸ் சேவை, 60 வருடங்களாக சாமிமலை நகரிலிருந்து அதிகாலை 4.30 மணிக்கு பயணத்தை ஆரம்பித்து சாமிமலை, மஸ்கெலியா, நோட்டன், கினிகத்தேனை, நாவலப்பிட்டி, கம்பளை, பேராதனை ஊடாக கண்டி வரை சேவையில் ஈடுபட்ட நிலையில், கடந்த சில வாரங்களாக இச்சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் அரச உத்தியோகத்தர்கள், மாணவர்கள், நாவலப்பிட்டி, கண்டி வைத்தியசாலைகளுக்கு செல்லும் நோயாளிகளும் அதிக பயனைப் பெற்று வந்ததுடன், இச்சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், இந்த பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பயணிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கால்நடைகள் தொடர்பில்

# கந்தப்பளையில் எச்சரிக்கை

ஆ.ரமேஸ்

தேயிலை மலைகள், அதனையொட்டிய வன பகுதிகளுக்கு அருகில் பாதுகாப்பின்றி மாடுகளை மேய்ச்சலுக்கு விடுவதை தவிர்த்து கொள்ளுமாறு கால்நடை வளர்ப்பாளர்களுக்கு கந்தப்பளை பொலிஸாரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கந்தப்பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.டி. விக்கிரமசிங்க, கந்தப்பளை பிரதேச தோட்டப்பகுதிகள் உள்ளிட்ட கிராம பகுதிகளில் உள்ள கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தெரிவித்துள்ளதாவது;

அண்மைக்காலமாக கந்தப்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் திருட்டு சம்பவங்கள் பல பதிவாகியுள்ளன.

அதற்கமைய, பாதுகாப்பற்ற தேயிலை மலைகள், வன பகுதிகளை ஒட்டிய பகுதிகளில் மேய்ச்சலுக்கு விடப்படுகின்ற மாடுகள், ஆடுகள் என்பன களவாடப்பட்டு வருகின்றன.

எனவே இவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்கள் தொடர்பில், தகவல்கள் திரட்டி நபர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான திருட்டு சம்பவங்களில் இருந்து கால்நடைகளைப் பாதுகாக்க கால் நடைகளின் உரிமையாளர்கள் அவதானமாக செயற்பட எச்சரிக்கை விடுப்பதாக அவர் தெரிவித்தார்.



# நிலமற்றோருக்கான நிலம்

## ஹட்டனில் காணி தினம் அனுஷ்டிப்பு

ஸ்.கணேசன்

மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்களுடன் பல்வேறு நபர்களின் பங்களிப்புடன் ஹட்டனில் நேற்று (21) காணி தினம் நடைபெற்றது.

இதன்போது, மலையக மக்களின் வாழ்வினை பிரதிபலிக்கும் கலை, கலாசார விழுமியங்கள் உள்ளடங்கிய ஊர்வலம் 'நிலமற்றோருக்கான நிலம்' எனும் தொனிபொருளில் நடைபெற்றது.

இந்த ஊர்வலம் ஹட்டன், மல்லிகைப்பூ சந்தியில் ஆரம்பித்து ஹட்டன் சாரதா கலாசார மண்டபம் வரை சென்றது. 'வீடு கட்ட 20 பேர்ச் காணி கொடு', 'வீட்டுடன் விவசாய காணி கொடு' போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளையும் காட்சிப்படுத்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் ஊர்வலத்தில் சென்றனர்.

மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வுக்கு, மலையகத்தில் குறிப்பாக தெனியாய, மாத்தளை, பதுளை, நுவரெலியா போன்ற பகுதிகளை சேர்ந்த சமூக செயற்பாட்டாளர்கள், ஆய்வாளர்கள் எனப் பல்வேறு பிரிவினரும் கலந்து கொண்டிருந்தனர்.

"மலையக மக்களின் கௌரவமான வாழ்வுக்கும், வாழ்வாதாரத்திற்குமான காணி உரிமையினை உறுதிசெய்வதன் மூலம் எமது தேசத்தின் அபிவிருத்தியை பலப்படுத்தி நாட்டின் தேசிய நீரோட்டத்தில் பங்கு கொள்வதை உறுதி செய்வோம்" என இதன்போது போராட்டகாரர்களால் வலியுறுத்தப்பட்டமை குறிப்பிடதக்கது.

மண்ணெண்ணெய் பிரச்சினைக்கு

# தீர்வு கிட்டும்

## ஜீவன் எம்.பியிடம் எரிசக்தி அமைச்சர் உறுதி

ஆ.ரமேஸ்

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்சினையுடன் மண்ணெண்ணெய் பிரச்சினையால் தோட்டத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு தீர்வொன்றை வழங்குமாறு தெரிவித்து, பாராளுமன்ற உறுப்பினரால், எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.



அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

எமது மலையக மக்கள், தமது அன்றாட பாவனைக்கு மண்ணெண்ணெயைப் பயன்படுத்தி வரும் நிலையில், தற்போது மண்ணெண்ணெய்க்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மலையக மக்கள், தமது அன்றாட வீட்டுத் தேவை உள்ளிட்ட தேவைகளுக்கு மண்ணெண்ணெய் மற்றும் சமையல் எரிவாயுவைப் பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது இவை இரண்டுக்கும் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால், தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பிரதேசங்களில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அவ்வப்போது கிடைக்கும் மண்ணெண்ணெய்க்கும் முகவர் நிலையங்களில் கிடைக்கும் சமையல் எரிவாயுக்கும் நீண்ட வரிசையில் நாள்கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது.

இதனால் தமது அன்றாட தொழிலில் கிடைக்கும் ஒரு நாள் அல்லது அதற்கு மேலாக வருமானத்தை இழக்கும் நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

எனவே, இதை ஒரு சிறப்புச் சூழ்நிலையாகக் கருதி, மண்ணெண்ணெய் தொடர்ந்து கிடைப்பதைத் உறுதிப்படுத்தி, நாட்டின் வெளிநாட்டு வருவாய்க்கு நேரடியாகப் பங்களிப்பு செலுத்துவோரின் வாழ்வாதாரத்தை உறுதிசெய்யும் வகையில் ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன் என அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்துவதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் எழுதிய கடிதத்துக்கு அமைச்சர் காஞ்சனா விஜயசேகர பதில் அளித்துள்ளார் என, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.







# 71 வருட சாபம்...

71 வருடகால சாபத்தை இல்லாதொழிப்போம் எனும் தொனிப்பொருளில், தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டம், நேற்று முன்தினம் (20) பதுளை நகரில் இடம்பெற்றது. (படம்: பாலித ஆரியவன்ஸ)

டயர், பெட்டரிகள் இன்மையால்

# 15 பஸ்கள் ஓடவில்லை

சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன் இ.போ.ச பஸ் டிப்போவுக்குள் டயர், பெட்டரிகளுக்கு பாரிய தட்டுப்பாடு காணப்படுவதாகவும் இதனால் பல பஸ்கள் போக்குவரத்து சேவையிலிருந்து விலகியுள்ளதாகவும் டிப்போ முகாமையாளர் டபிள்யூ.ஜி.ஜே. கே.கீர்த்திரத்ன தெரிவித்தார்.

குறித்த டயர், பெட்டரி தட்டுப்பாடு காரணமாக ஹட்டன் பஸ் டிப்போ மூலம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 15 பஸ்கள் வரை சேவைகளில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அறிவித்துள்ள நிலையில், உடனடியாக டிப்போவுக்கு தேவையான டயர் மற்றும் பெட்டரிகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்ததாக குறிப்பிட்டார்.

ரஷ்யப் பிரஜைக்கு எரிபொருள் வழங்கியதால்

# ஹப்புத்தளையில் அமைதியின்மை

எம். செல்வராஜா

இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ள ரஷ்ய பிரஜை ஒருவர், கொள்கலனில் எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு முயற்சித்ததால் ஹப்புத்தளை எரிபொருள் நிலையத்தில் நேற்று (21) அமைதியின்மை ஏற்பட்டது.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும், குறித்த சுற்றுலாப் பயணி எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு அங்கு கூடியிருந்தவர்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.



இதனால் எரிபொருள் விநியோகம் சிறிது நேரம் தடைப்பட்டது.

ஹப்புத்தளை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு ஒரு வாரத்துக்குப் பின்னர் நேற்று (21) எரிபொருள் விநியோகிக்கப்பட்டதால், காலை முதல் வாகனங்கள் நீண்ட வரிசையில் தரித்து நின்றிருந்தமை காரணமாக கொழும்பு - ஹப்புத்தளை பிரதான வீதியின் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.



# விடைத்தாள் மதிப்பிடும் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

பி.கேதீஸ்

விடைத்தாள் மதிப்பீடு செய்யும் ஆசிரியர்களால் நுவரெலியா ஆவாஎலிய மகளிர் உயர்நிலை பாடசாலை முன்பாக நேற்று (21) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 5 நாள்களாக எரிபொருள் இன்மையால் பாரிய சிரமத்தின் மத்தியிலேயே பணியில் ஈடுபடுவதாகவும் தமக்கு எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கான அனுமதி சீட்டு வழங்கப்பட்டுள்ள போதிலும் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள சிரமப்படுவதாகவும் எதிர்வரும் நாள்களில் மதிப்பீட்டு பணிகளில் இடையூறு ஏற்படாமல் இருக்க அரசாங்கம் தலையிட்டு, போக்குவரத்து சிரமங்களை தீர்க்குமாறும் அதேவேளை மதிப்பீட்டு பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கான போக்குவரத்து கொடுப்பனவுகள் அரசாங்கத்தால் அதிகரிக்கப்பட வேண்டுமென ஆர்ப்பாட்டத்தின் போது வலியுறுத்தப்பட்டது.



கண்டி வைத்தியசாலையின்

# இரசாயனகூட கதவுகள் உடைப்பு

## விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ள பொலிஸார்

சேஹ்ன் செனவிரத்ன

கண்டி தேசிய வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களுக்கு முன்னெடுக்கப்படும் வைரஸ் பரிசோதனை இரசாயனகூடத்தின் இரண்டு கதவுகளும் உடைத்து, சிலர் உள்நுழைந்துள்ளமை தொடர்பில், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (20) அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், இச்சம்பவம் இடம்பெற்ற போது, வழமையாக அங்கிருக்கும் காவலாளி அங்கிருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இரசாயனகூட பாதுகாப்பாக்காக நியமிக்கப்பட்டுள்ள காவலாளி, அன்றைய தினம் கடமைக்கு சமூகமளிக்காமை தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் என்றும் கண்டி தேசிய வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் இரேசா பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இவ்வாறு உடைக்கப்பட்ட இரசாயனகூடத்துக்குள் அதிக விலை மதிப்புடைய இரசாயன திரவியங்கள், பரிசோதனைக்காக பயன்படுத்தப்படும் பெறுமதியான உபகரணங்கள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறிது காலத்துக்கு முன்னர் குறித்த இடம், போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் இடமாக நடத்தப்பட்டு வந்ததாகவும் இதன்போது அவர்களுக்கு வழங்கப்பட்ட சில மருந்துகளை கோரி, போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் சிலர் தொடர்ச்சியாக அந்த இடத்துக்கு வருவதாகவும் இரசாயனகூட பணியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனவே, இவ்வாறு போதைப்பொருளுக்கு அடிமையான எவரோ அந்த மருந்துகளைத் தேடி, இரசாயனகூட கதவுகளை உடைத்திருக்கலாம் என்ற கோணத்திலும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருப்பதாகத் தெரிவித்தனர். இதேவேளை இரசாயனகூடத்தில் இருந்த சில ஆவணங்கள் ஆங்காங்கே வீசப்பட்டிருந்த நிலையில், மருத்துவ உபகரணங்கள் எதுவும் திருடப்பட்டுள்ளமை தொடர்பில் இதுவரை உறுதி செய்யப்படவில்லை என்றும் பதில் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் வைத்தியசாலை பணியாளர்கள் பலரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன.

# மூளைசாலிகள் வெளியேறுவது எதிர்காலத்துக்கு பேராபத்து

நாளொன்றுக்கும், ஒருநாள் சேவையிலும் விநியோகிக்கப்படும் கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது, உள்ளூரில் வாழ்வோருக்கு சந்தோஷமான செய்தியாக இருப்பினும், நீண்டகால தூர நோக்கத்துடன் பார்க்குமிடத்து, நாட்டின் எதிர்கால வளர்ச்சியில் பாரிய பின்னடைவை சந்திக்கவேண்டிய நிலைமையொன்று ஏற்படக்கூடும்.

பணிப்பெண்களாகவும் இதர தொழில்துறைகளுக்கும் செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது, அவர்களின் குடும்ப மேம்பாட்டுக்கும் நாட்டுக்கும் நன்மை பயப்பனவாய் அமைந்திருக்கும். ஆனால், மூளைசாலிகள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், இலத்திரனியலாளர்கள், வைத்தியர்கள், தகவல் தொழில்நுட்பவியலாளர்கள் உள்ளிட்டோர், நாட்டைவிட்டுச் செல்வது, எதிர்காலத்தில் நாட்டுக்கு பேராபத்தாக முடியும்.

ஒருநாள் சேவையின் ஊடாக நாளொன்றுக்கு 800 கடவுச்சீட்டுகளே விநியோகிக்கப்பட்டன. அந்த எண்ணிக்கை மூவாயிரம் தொடக்கம் 3,500 வரையிலும் அதிகரித்துள்ளன. சாதாரண சேவைகளின் ஊடாக இதுவரையிலும் 600 கடவுச்சீட்டுகளே விநியோகிக்கப்பட்டன. தற்போதைய சூழ்நிலையில் 1,200 ஆக அதிகரித்துள்ளது.

கடவுச்சீட்டுகளுக்கான கட்டணங்களை பார்க்குமிடத்து, குடும்ப வறுமைக்காக வெளிநாடுகளுக்குச் செல்வோர், மிக அவசர நிலைமையைத் தவிர, ஏனைய சந்தர்ப்பங்களில் ஒருநாள் சேவையின் ஊடாக கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆக, உயர்தொழில்களும் கூடுதலான சம்பளத்தையும் எதிர்பார்க்கும் மூளைசாலிகளுக்கே ஒருநாள் சேவையின் தேவைப்பாடு கூடுதலாய் இருக்கும்.

அரச சேவையில் ஐந்து வருடங்களுக்கு மேல் கடமையிலிருந்தவர்கள், சம்பள விடுமுறையுடன் வெளிநாடுகளுக்குச் செல்லலாம் என்றோர் அறிவிப்பும் விடுக்கப்பட்டது. இது நாட்டுக்கு நன்மை பயப்பதாய் இருந்தாலும் எதிர்கால சந்ததியினருக்கு பேராபத்தை விளைவிக்கும்.

நாடு அரசியல், பொருளாதார நெருக்கடிக்கு மட்டும் முகங்கொடுக்கவில்லை. கல்வி, சுகாதாரம், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளிலும் கடுமையான பாதிப்புகளையும் பின்னடைவுகளையும் சந்தித்துள்ளது. அவற்றிலிருந்து எதிர்கால சந்ததியினரை மீட்டெடுத்து, அவர்களுக்குள் இருக்கும் திறமைகளை இனங்கண்டு மேம்படுத்த வேண்டும். அவற்றுக்கெல்லாம் துறைசார் நிபுணர்களும் மூளைசாலிகளும் இங்கிருக்க வேண்டும். அதற்கான தொழில்முறைமைகளை ஏற்படுத்த வேண்டும். தொழில்வாய்ப்புகளைத் தேடி வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கும் இலங்கை பிரஜைகள், முறையாக டொலரை அனுப்புவார்களாயின், நாட்டில் அன்னியச் செலாவணிக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்படாது. அதேபோல, முறையற்ற வகையில் டொலர், நாட்டுக்கு அனுப்பப்படுவது மற்றும் புழக்கத்தில் இருப்பது உள்ளிட்ட சட்டவிரோதமான செயற்பாடுகளை முழுமையாக தடை செய்வதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இந்த நெருக்கடி இன்றோடு முடிந்துவிடுவதில்லை. தற்காலிக தீர்வுடன் நீண்டகால திட்டங்களையும் வகுக்கவேண்டும். அதற்கு துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவே வேண்டும். மூளைசாலிகளை இறக்குமதி செய்வதை விடவும் இங்கிருப்போரின் கருத்துகளைச் செவிமடுத்து, திட்டங்களைத் தீட்டினால் அதுவே யதார்த்தபூர்வமானதாய் அமையும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

கவலைகளை நெஞ்சத்தில் வைத்துக் குமைதல் கூடாது. உண்மையான தோழர்கள் அல்லது, உங்களின் தாய், தந்தையர், அனுபவம் வாய்ந்த பெரியோரிடம் உங்களின் கவலைகளைச் சொல்லலாம்.

துன்ப உணர்வுகளை உறவாகப் பேணுவதைத் தவிர்க்கவும். அடிக்கடி தங்களது பிரச்சினைகளை, சோகத்தை, இயலாமை, ஏக்கங்களை சொல்பவர்களுக்கு, தேறுதல் கூறுவது மனிதாபிமானம் ஆகும்.

என்றும் மனம்விட்டுப் பேசுபவர்களை மக்கள் விரும்புகின்றார்கள். நகைச்சுவையாகப் பேசுபவர்களைச் சுற்றி ஒரு கூட்டமே இருக்கும்.

எந்தத் துயரையும் உடைக்க என்னால் முடியும் என்ற துணிவை வரவழைத்தால், எதுவுமே எம்மைத் தாக்காது.

உலகில் கஸ்டங்களை அனுபவிக்காதவர்கள் எவர் இருக்கிறார்கள். உங்களைவிட, பல சவால்களை, எதிர்ப்புகளை சந்தித்தவர்கள் அதிலிருந்து மீண்டுவந்து, மீண்டும் புதிய மனிதனாக மாறிய வரலாறுகள் பலவும் உண்டு.

அழுவது அழகல்ல; எழுவதே சிறப்பு. சுற்றிச் சுற்றித் துயருடனே வாழ்ந்தால், மனித குலத்தின் எதிர்காலத்தின் நிலை என்ன? ஆன்மபலம் வேண்டும். கோழைகளுடன் தோழமை, சிரமங்களை உண்டுபண்ணலாம்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### திருவையாறில் அபாயகரமான நிலையில் பாலம்

கிளிநொச்சி, திருவையாறு பகுதியில் உள்ள பாலம் அபாயகரமான நிலையில் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

திருவையாறு பிரதேசத்தையும் வின்சன் வீதியையும் இணைக்கும் குறித்த பாலமானது, இரணைமடு குளத்தின் நீர்பாசன வாய்க்காலை கடக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. பல தசாப்த காலத்துக்கு முன்னர், சுண்ணாம்புக் கல்லால் அமைக்கப்பட்ட இந்தப் பாலம், இன்று உடைந்து, அபாயகரமான நிலைக்கு வந்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் 'இபாட்' திட்டத்தின் கீழ் இரணைமடு குளத்தின் அபிவிருத்தி பணியின் போது, அப்பகுதியில் உள்ள பாலங்கள் புதிதாக அமைக்கப்பட்டதுடன், குறித்த பாலமும் புனரமைப்பு செய்யப்பட்டது. ஆயினும், பாலத்தின் பாதுகாப்பான நிலை தொடர்பில் ஆராயாது, மேலெழுந்தவாரியாக புனரமைப்புச் செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

குறித்த பாலத்தின் ஊடாக தினமும் ஆயிரக்கணக்கானோரும் கனரக வாகனங்கள் உள்ளிட்ட வாகனங்களும் பயணிப்பதாகவும் அபாயகரமான நிலையிலேயே பிரயாணங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே, குறித்த பாலத்தைப் புனரமைத்து, அச்சமின்றி பயணிக்கும் சூழலை ஏற்படுத்தி தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

யது பாஸ்கரன்

“மக்களே பொறுப்பாளர்கள்” என்ற

# பசிலின் வாதம் சரியானதே!



எம்.எஸ்.எம். ஐயூப்

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்த முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்‌ஷ, அதனை அறிவிப்பதற்காக நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போது கூறியவற்றில், ஒரு கருத்தைத் தவிர ஏனைய அத்தனையும் அர்த்தமற்றவை என்றே கூற வேண்டும்.

தற்போது நிலவும் பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்கு, ஜனாதிபதிக்கும் ஆளும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும் வாக்களித்த பொதுமக்களே, பொறுப்பை ஏற்க வேண்டும் என்று பசில் அங்கு கூறிய கருத்து, ஏனையவற்றைப் பார்க்கிலும் எவரையும் சிந்திக்க வைத்திருக்க வேண்டும்.

ஜூன் மாதம் ஒன்பதாம் திகதி நாடாளுமன்றத்திலிருந்து இராஜினாமாச் செய்த பசில், 10ஆம் திகதி இந்த ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தினார். அந்த மாநாட்டின் போது அவர் வெளியிட்ட பல கருத்துகளும் நடந்து கொண்ட விதமும் பலரது விமர்சனத்துக்கு இலக்காகின.

பொருளாதாரப் பிரச்சினைகளால் நாடு பற்றி எரியும் போது, அந்த நிலைமைக்கு முக்கிய பொறுப்பாளராகிய பசில், மக்கள் படும் கஷ்டங்களைப் பற்றி கவலைப்படுவதாக தெரியவில்லை என்பதே அந்த விமர்சனமாகும்.

நாட்டின் பொருளாதார பிரச்சினைகளைப் பற்றிய பாரதூரமான கலந்துரையாடலாக அமைய வேண்டிய அந்த ஊடகவியலாளர் மாநாட்டை, நகைச்சுவையான கருத்துகளை வெளியிட்டு, கேளிக்கைக்கான சந்தர்ப்பமாக மாற்றிவிட்டார். ஆனால், ஊடகவியலாளர்கள் அவரை விட்டுவிடவில்லை. நாட்டின் தற்போதைய அவலநிலைக்கு அவரும் காரணமானவர் என்ற அர்த்தத்திலேயே அவர்கள் அவரிடம் கேள்விகளைக் கேட்டனர்.

2010ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷவின் அரசாங்கத்தில், அவர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கடமையாற்றினார். அக்காலத்தில் ஏனைய அமைச்சுகளும் நடைமுறையில் அவரது கட்டுப்பாட்டிலேயே இயங்கின. மொத்தத்தில் நாட்டின் பொருளாதாரம் அவரிடமே இருந்தது.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ ஜனாதிபதியாக பதவியேற்றவுடன், அவர் அமைச்சுப் பதவி எதையும் ஏற்காவிட்டாலும் அவரே பொருளாதாரத்தை வழிநடத்தினார். பின்னர், கடந்த வருடம் ஜூலை மாதம் நிதி அமைச்சராக மீண்டும் நேரடியாக பொருளாதாரத்தை தமது கையில் எடுத்தார்.

எனவேதான், தற்போதைய நிலைமைக்கும் அவருக்கும் முக்கிய பங்கு இருக்கிறது என்ற அர்த்தத்தில் ஊடகவியலாளர்கள் அவரிடம் கேள்விகளைக் கேட்டனர். எனினும், அவர் அந்தக் கருத்தை முற்றாக நிராகரித்தார். பொருளாதார நெருக்கடிக்கு தாம் எவ்வகையிலும் பொறுப்பாளர் அல்ல என்றே, அவர் வலியுறுத்திக் கூறினார். இந்தச் சந்தர்ப்பத்தில் தான் அவர், “தற்போதைய நிலைமைக்கு ஜனாதிபதிக்கும் ஆளும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும் வாக்களித்த மக்களும் ஊடகங்களும் பொறுப்பை ஏற்க வேண்டும்” என்றார்.

இது கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும், பொதுஜன பெரமுனவுக்கு வாக்களித்த மக்களை பரிகாசம் செய்வதாக காணப்பட்ட போதிலும், ஒரு வகையில் அதைப் பரிகாசமாகக் கருத முடியாது. ஏனெனில் அவர் கூறிய கருத்தை, முற்றாக மறுக்க முடியாது. ஆயினும், அது தம் மீதும் தமது கட்சியின் மீதும் நம்பிக்கை வைத்து, ஆட்சி அதிகாரத்தைத் தம்மிடம் ஒப்படைத்த மக்களைக் காட்டிக் கொடுக்கும் செயல் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

பசில் ராஜபக்‌ஷவே பொதுஜன பெரமுனவைக் கட்டி எழுப்பிய சிற்பி என்று வர்ணிக்கப்படுகிறார். கடந்த ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தலின் போது வெற்றிக்கான தந்திரோபாயங்களை வகுத்தவர் என்றும் பலர் அவரை வர்ணிக்கின்றனர். எனவே, அவரும் அவரது கட்சியுமே மக்கள் அவர்களுக்கு வாக்களிக்கும் வகையிலான சூழ்நிலைமைகளை உருவாக்கினர்.

எனவே, தற்போதைய நிலைக்கு பொது மக்களும் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று கூறுவது, ஏமாற்றியவர், ஏமாந்தவரை ஏமாந்ததற்காக குறைகூறுவதற்குச் சமமாகும். இந்த இடத்தில் தான், அவரது கூற்று பரிகாசமாக மாறுகிறது.

அவர் கூறியதை, எவராலும் மறுக்க முடியாது. ஆனால், அரசியல் அறிவோ பொருளியல் அறிவோ இல்லாத கோட்டாபயவின் 'இமேஜை' சகலவற்றிலும் வல்லவனாக ஊதிப் பெருப்பித்து, மிகவும் மோசமாக இனவாதத்தையும் தூண்டி, தமது கட்சிக்கு வாக்களிக்கும் வகையில் தாமும் பொதுஜன பெரமுனவின் ஏனைய தலைவர்களும் மக்களை ஏமாற்றியமை, பசிலுக்கு தெரியாமல் இருக்க முடியாது. எனவே மக்களும் தற்போதைய நிலைக்கு காரணமானவர்கள் என்பது உண்மையாயினும், அதைக் கூற பசிலுக்கு தார்மிக உரிமை இல்லை.

பசில் கூறியதைப் போல், உண்மையிலேயே மக்களும் ஊடகங்களும் தான் தற்போதைய நெருக்கடிகளுக்குப் பொறுப்பை ஏற்க வேண்டுமா என சிலர் சந்தேகிக்கலாம். ஏனெனில், அரசியல்வாதிகள் இந்நிலைமைக்கு காரணமானவர்கள் அல்ல என்பதைப் போல் தான், அவரது கருத்து அமைந்துள்ளது.

உண்மையிலேயே மக்களோ ஊடகங்களோ, இந்தப் பிரச்சினையின் போது முதல் பிரதிவாதி அல்ல. முதல் பிரதிவாதி எவ்வித சந்தேகத்துக்கும் இடமின்றி அரசியல்வாதிகளே ஆவர். அவர்கள் உருவாக்கிய சூழ்நிலைமையின் காரணமாகவே, சிந்திக்காமல் மக்கள் காலத்துக்குக் காலம் ஒவ்வொரு கட்சிக்கும் வாக்களிக்கின்றனர்.

உலகில் பல நாடுகளோடு ஒப்பிடுகையில், இலங்கை மக்கள் எழுத்தறிவில் முன்னணியில் உள்ளனர். அவ்வாறு இருந்தும், தமது சொந்த அனுபவங்களையாவது பகுத்தறிவோடு முறையாக ஆராய்ந்து, முடிவெடுக்க முற்படாத மடமையின் காரணமாகவும், அரசியல் என்பது தமது வாழ்க்கை வசதிகளை நிர்ணயிக்கும் பிரதான காரணி என்பதை உணராது, அதனை வெற்றி தோல்விக்கான சூதாட்டமாக கருதும் பண்பின் காரணமாகவும் மக்கள் தேர்தல் காலங்களில் தவறான முடிவுகளை எடுக்கின்றனர். அதன் மூலம் மக்களைப் பற்றி பசில் கூறிய கருத்து எப்போதும் உண்மையாகிறது.

மக்களும் தற்போதைய நிலைக்கான காரணங்களில், தமது பங்கை ஏற்கத்தான் வேண்டும். அதன் மூலம் பொருளாதார நெருக்கடியின் காரணமாக நாட்டில் வீணாக இடம்பெறும் மரணங்கள், தற்கொலைகளுக்கும் அவர்களும் பொறுப்பை ஏற்க வேண்டும். ஆகவே, பசில் பொறுப்பில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக கூறிய கருத்தாக இருந்தாலும், மக்களைப் பற்றிய பசிலின் அக்கருத்தை நிராகரிக்க முடியாது.

இதை சற்று விரிவாக ஆராயலாம். கடந்த அரசாங்கத்தின் ஆரம்பத்தில் இருந்து, சுமார் ஒரு வருட காலத்தில் அப்போதைய ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் எழுந்தன. இதன் விளைவாக நம்பிக்கையை இழந்த மக்கள், 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது, பொதுஜன பெரமுனவுக்கு வாக்களித்தனர்.

இந்த நிலையில், அடுத்த ஜனாதிபதி தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் வெற்றி பெறுவதற்காக பொதுஜன பெரமுன, முஸ்லிம்களுக்கு எதிரான பிரசாரங்களை மீண்டும் முடுக்கிவிட்டது. அதே ஆண்டு அம்பாறை, திகன போன்ற பகுதிகளில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்செயல்களில் அவர்களது கைவரிசை காணப்பட்டது.

இதன் விளைவே, 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதலாகும். தாக்குதலுக்கு தலைமை தாங்கிய ஸஹ்ரான் அதனை ஒரு வீடியோவிலும் கூறியிருந்தார். அந்த வீடியோவை பொலிஸாரே ஊடகங்களுக்கு விநியோகித்து இருந்தனர். பொதுஜன பெரமுன, அந்தச் சம்பவத்தை மிக மோசமாக அரசியலுக்காக பாவித்தது. தாக்குதல் இடம்பெற்று ஆறு நாள்களுக்குப் பின்னர், “நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளேன்” என்பதாக கோட்டாபய ராஜபக்‌ஷ அறிவித்தார்.

புலிகளுக்கு எதிரான போர் வெற்றியின் முழுப் பெருமையையும் அப்போதைய இராணுவத் தளபதியான சரத் பொன்சேகாவுக்கு வழங்கியிருந்த மஹிந்த ராஜபக்‌ஷ ஆதரவாளர்கள், பொன்சேகா 2010ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டதை அடுத்து, அந்த முழுப் பெருமையையும் கோட்டாவுக்கு வழங்கலாயினர். எனவே, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை பாவித்து, கோட்டாவின் 'இமேஜை' ஊதிப் பெருக்குவது பொதுஜன பெரமுனவுக்கு மிகவும் இலகுவாகியது.

அத்தோடு, அத்தாக்குதலையே பாவித்து பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவான ஊடகங்கள் முஸ்லிம்களுக்கும் இஸ்லாம் மதத்துக்கும் எதிராக பெரும் பிரசாரத்தை முடுக்கிவிட்டன. முஸ்லிம் தனியார் சட்டம், முஸ்லிம்களின் இனப்பெருக்கம், சிங்களவர்களின் இனப்பெருக்கத்துக்கு எதிரான முஸ்லிம்களின் சூழ்ச்சிகள் என்று பல்வேறு கதைகள் பரப்பப்பட்டன. டொக்டர் ஷாபியின் விவகாரமும் அதில் ஓரங்கமாகும்.

அதன் மூலம், நாடு பெரும் ஆபத்தில் இருப்பதாகவும் அதனை எதிர்கொள்ள பலமானதொரு தலைமை நாட்டுக்குத் தேவை என்றதோர் அபிப்பிராயமும் கட்டி எழுப்பப்பட்டது. அந்தப் பலமான தலைமையாக கோட்டா சித்திரிக்கப்பட்டார். அத்தோடு, நாகலோகத்திலிருந்து ஒரு நாகராஜன் புத்தரின் சில சின்னங்களை தாங்கி வந்து தந்ததாகவும் அது புதிய தலைமையொன்றின் அறிகுறியாகும் என்றும் இலங்கையில் மிக முக்கியமான விகாரையான களனி விகாரையின் பிரதம பிக்கு அறிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் இந்தத் தந்திரோபாயங்கள் வெற்றியளித்தன. கோட்டா ஜனாதிபதியானார்; பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் பதவிக்கு வந்தது.

இவற்றைப் பற்றி, அக்காலத்திலேயே சிங்கள - பௌத்த புத்திஜீவிகள் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்தனர். ஆனால், மக்கள் அதை ஏற்கவில்லை. இப்போது கோட்டா தலைமையிலான அரசாங்கம் தோல்விடைந்த நிலையில், “நாம் ஏமாந்துவிட்டோம்” எனப் பலர் சமூக ஊடகங்களில் புலம்புகின்றனர்.

எனவே, மக்கள் தமது அறிவைப் பாவித்து வாக்களிக்கவில்லை என்பதும் ஊடகங்கள் அவர்களுக்கு முறையான தகவல்களை வழங்கவில்லை என்பதும் மிகத் தெளிவாகத் தெரிகிறது. அந்தவகையில் மக்களும் ஊடகங்களும் நாட்டின் தற்போதைய பரிதாபகரமான நிலைக்கு பொறுப்பாளர்கள் என்று பசில் கூறுவது முற்றிலும் உண்மையேயாகும்.




# அமைச்சரவை முடிவுகளில் சில...

மகேஸ்வரி விஜயனந்தன்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் (19) கூடிய வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில...

## ‘தேசிய தனி முகப்பிடம்’

உலக வர்த்தக அமைப்பின், வர்த்தக நடவடிக்கைகளை இலகுபடுத்தும் ஒப்பந்தம் 2017 பெப்ரவரி மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், இலங்கையும் குறித்த ஒப்பந்தத்தின் பங்காளராக கையொப்பமிட்டுள்ளது. குறித்த ஒப்பந்தத்திற்கமைய தேச எல்லைகளூடாக நாடுகளுக்கிடையே மேற்கொள்ளப்படும் வர்த்தக நடவடிக்கைகள் (இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் மீள்ஏற்றுமதி) பங்கேற்பு வர்த்தக நடவடிக்கை ஒழுங்குபடுத்தல் அதிகார சபைகளுக்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் மற்றும் தரவுகளை சமர்ப்பிப்பதற்கு ஒரு நிலையத்தை (தனி முகப்பிடம்) ஆரம்பித்து மேற்கொண்டு செல்வதற்கான கடப்பாடு இலங்கைக்கு உள்ளது.

திட்டமிடப்பட்டுள்ள இக்கருத்திட்டத்தின் மதிப்பீட்டு செலவு 15 மில்லியன் அமெரிக்க டொலராவதுடன், உலக வங்கி மற்றும் ஏனைய தரப்பினர்களுடன் குறித்த நிதியைப் பெற்றுக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள ‘தேசிய தனி முகப்பிடம்’ கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக சமர்ப்பித்த யோசனைக்கு அங்கிகாரம்.

## கடலட்டை உற்பத்திக் கிராமங்கள்

இயற்கை கடல்சார் சூழலில் பிடிக்கப்படும் கடலட்டைகளின் ஏற்றுமதியால் குறிப்பிடத்தக்களவு வெளிநாட்டு செலாவணியை ஈட்டிக்கொள்ள முடியும்.

அதற்கமைய, பெற்றுக்கொண்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு கடலட்டை இனப்பெருக்க நிலையத்தை நிறுவுதல், கடலட்டைப் பண்ணைகளை விரிவாக்கம் செய்தல், வணிக ரீதியான உயிரின வளர்ப்பு போன்ற கடலட்டை ஏற்றுமதிக் கிராமங்களை உருவாக்குவதன் மூலம் வெளிநாட்டு செலாவணி ஈட்டுவதை அதிகரிக்க முடியும்.

மீனவர் சமூகங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு வணிக ரீதியான கடலட்டை உயிரின வளர்ப்பு கருத்திட்டமொன்று இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையால் (NAQDA) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த கருத்திட்டத்துக்காக, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் 5,000 ஏக்கர் காணிகளை அடையாளம் கண்டு, அவற்றில் 100 ஏக்கர்களுடன் கூடிய கடலட்டை உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கிராமங்களை உருவாக்குவதற்கும், 100 ஏக்கர் காணியில் 01 ஏக்கர் வீதம் கடலட்டை உற்பத்திப் பண்ணைகளைத் தாபித்து குறித்த கருத்திட்டத்தை மேலும் விரிவாக்கம் செய்வதற்காகவும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## தற்காலிக அடிப்படையில் வழங்கல்

இலங்கை ரயில் திணைக்களத்துக்குச் சொந்தமான பாதுகாக்கப்பட்ட காணிகள் மொத்தமாக 14,000 ஏக்கர் காணப்படுவதுடன், அவற்றில் 10 சதவீதமான காணிகள் பல்வேறு பணிகளுக்காக குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன.

பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமானதுமான காணிகளை விவசாய நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதற்காக தற்காலிக குத்தகை அடிப்படையில் வழங்குவது உகந்ததென அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த பிரதேசங்களில் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு, ரயில் பாதைக்கு அருகாமையில் வசிக்கின்றவர்களுக்கு மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு குறித்த காணிகளை விவசாயப் பயன்பாட்டுக்காக குத்தகை அடிப்படையில் (01) ஒரு வருடகாலத்திற்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கிகாரம்

## காணித்துண்டை மின்சார சபைக்கு ஒப்படைத்தல்

முத்துராஜவெலவில் அமைந்துள்ள யுகதனவி மின்னுற்பத்தி நிலையத்திற்கு அருகாமையிலுள்ள 10 ஏக்கர் காணித்துண்டில் 300 மெகாவோட் மின்னுற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்காக இலங்கை மின்சார சபைக்கு வழங்குவதற்காக இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையால் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அரச விலைமதிப்பீ ட்டாளரால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள குறித்த காணித்துண்டின் சந்தைப் பெறுமதியை அறவிட்டு, அதனை இலங்கை மின்சார சபைக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## கண்காணிப்பு முறைமையை நிறுவுதல்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற அணுக்கக் கண்காணிப்பு முறைமை (Surveillance System) 2008 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டுள்ளதுடன், சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் குறித்த முறைமையை நவீனமயப்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

உலக வங்கியின் நிதியத்தின் கீழ் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற நிதிப்பிரிவின் நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்தின் மூலம் அதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான இயலுமை உள்ளது. அதற்கமைய, தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் அணுக்கக் கண்காணிப்பு முறைமையைப் பொருத்திய லண்டன் பங்குப் பரிவர்த்தனைக் குழுவின் உறுப்பினரான இலங்கையில் அமைந்துள்ள Millennium IT Software (Pvt) Ltd. இற்கு நேரடிப் பெறுகைக் கோரலாக பிரேரிப்பொன்றை பெற்று குறித்த அணுக்கக் கண்காணிப்பு முறைமையை நவீனமயப்படுத்துவதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## கலப்பு அபிவிருத்தி

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை மூலம் அநுராதபுரம் அஞ்சல் அலுவலகத்தில் அமைந்துள்ள 99 ஏக்கர் காணியில் கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

காணியின் சமகாலப் பெறுமதிக்கு சமமான வகையில் அஞ்சல் அலுவலக வளாகத்தை அஞ்சல் திணைக்களத்திற்கு வழங்கும் உடன்பாட்டுடன், குறித்த காணியை விடுவிப்பதற்கு அத்திணைக்களம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

தேசிய அல்லது சர்வதேச போட்டி விலைமுறிப் பொறிமுறையைப் பயன்படுத்தி விருப்பக் கோரல்களைப் பெற்று பொருத்தமான முதலீட்டாளர்களைத் தெரிவு செய்து அரச-தனியார் பங்குடமைக் கருத்திட்டமாக இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

---

சென்னை

### அ.தி.மு.க கட்சி விதிகளில் திருத்தங்கள்;

# இன்று விசாரிக்க நீதிமன்றம் ஒப்புதல்

அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் (அ.தி.மு.க.,) கட்சி விதிகளில் திருத்தங்கள் செய்ய தடை விதிக்க கோரி தாக்கல் செய்த கூடுதல் மனுக்களை சென்னை உயர் நீதிமன்றம் இன்று (22) விசாரிக்க உள்ளது.



அ.தி.மு.க பொதுச் செயலாளராக இருந்த ஜெயலலிதா மறைவுக்கு பின், கட்சியில் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் உருவாக்கப்பட்டன. அ.தி.மு.கவின் சட்ட திட்டங்களுக்கு எதிரானது எனக் கூறி, அக்கட்சி உறுப்பினர்கள் இருவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

அந்த மனுவில், பொதுச் செயலாளரின் அதிகாரங்களை ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளருக்கு வழங்கி நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இரத்து செய்ய வேண்டும்.

2021 ஆண்டு டிசெம்பர் மாதம் நடந்த அ.தி.மு.க உட்கட்சி தேர்தலை இரத்து செய்ய வேண்டும். ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர்கள் புதிய நியமனங்கள் மேற்கொள்ள தடை விதிக்க வேண்டும் எனக் கோரியிருந்தனர். இந்த வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், பொதுக்குழு, செயற்குழு கூட்டங்களைக் கூட்ட ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளருக்கு தடை விதிக்கக் கோரி கூடுதல் மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---



**உணவு**

இந்தியாவின் நல்பாரி மாவட்டத்தில் சோல்மாரா பகுதி, வெள்ள நீரில் மிதக்கிறது. நபரொருவர் தனது கால்நடைகளுக்கு உணவை எடுத்துச் செல்வதை படத்தில் காணலாம்.

---

பெங்களூர்

### எதிர்காலத்தை கட்டியெழுப்ப

# உதவியாக அமையும்

### பெங்களூரில் ரூ.27,000 கோடி திட்டங்களை தொடங்கினார் பிரதமர்



மத்திய அரசின் அக்னி பாதை திட்டத்துக்கு எழுந்துள்ள எதிர்ப்புகள் குறித்து மறைமுகமாக சுட்டிக் காட்டி பேசிய பிரதமர் நரேந்திர மோடி, “இப்போது சில திட்டங்களுக்கு எதிராக போராட்டங்கள் நடந்தாலும், இந்த நேரத்தில் அரசின் சில முடிவுகள் முதலில் நியாயமற்றதாகத் தோன்றினாலும், பின்னர் அந்தத் திட்டங்கள் தேசத்தைக் கட்டமைக்க உதவியாக அமையும்” என்றார்.

இருப்பினும் பிரதமர் மோடி தனது உரையின்போது, அக்னி பாதை திட்டம் குறித்து நேரடியாகக் குறிப்பிடவில்லை.

பிரதமர் நரேந்திர மோடி இரண்டு நாள் பயணமாக நேற்று முன்தினம் (20) பெங்களூர் வந்தார். அங்கு யஷ்வந்த்பூர் ரயில் நிலையம், பெங்களூர் கன்டோன்மென்ட் ரயில் நிலையம், புறநகர் ரயில் திட்டம் ஆகியவற்றுக்கான ரூ.27,000 கோடி மதிப்பிலான உள்கட்டமைப்பு திட்டங்களை தொடங்கி வைத்தார்

கர்நாடகாவில் தொடங்கப்பட்டுள்ள ரூ.27 ஆயிரம் கோடி மதிப்பிலான உள்கட்டமைப்பு திட்டங்களால் கர்நாடக மக்கள் பெரிதும் பயனடைவார்கள். கர்நாடகா முழுமையான வளர்ச்சி பெற்ற மாநிலமாக மாறும் நாள் நெருங்கி வருகிறது. புறநகர் ரயில் திட்டங்களால் பெங்களூரில் போக்குவரத்து வெகுவாக குறையும் என்றார்.

---

ராஞ்சி

# ஒரே நேரத்தில் இரு பெண்களை திருமணம் செய்த வாலிபர்

ஒரே நேரத்தில் இரண்டு பெண்களை, இளைஞன் திருமணம் செய்த சம்பவமொன்று, ஜார்க்கண்ட் மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.



பாண்டா கிராமத்தை சேர்ந்த இளைஞனும் தே பகுதியை சேர்ந்த பெண்ணொருவரும் 3 வருடங்களாக திருமணம் ஆகாமல் ஒன்றாக வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களுக்கு ஒன்றரை வயதில் குழந்தையும் உள்ளது.

இதனிடையே அந்த இளைஞன், மேற்கு வங்காளத்தில் உள்ள செங்கல் சூளைக்கு வேலைக்கு சென்றார். அங்கு பணிபுரிந்த இளம் பெண்ணுக்கும் இடையில் காதல் மலர்ந்தது.

இந்தக் காதல் அம்பலமானது. 2 பெண்களும் முதலில் எதிர்த்தாலும் அந்த இளைஞன், இரு பெண்களையும் சமாதானம் செய்து வைத்தார். அவர்களது குடும்பத்தினர் பெரிதாக எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

ஒருவழியாக, 2 பெண்களையும் சந்தீப் திருமணம் செய்து கொள்ள முடிவானது. ஆனால் இதற்கு கிராம மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஒரே சமயத்தில் இருவருக்கும் தாலி கட்டி திருமணம் செய்து கொண்டார்.

இது குறித்து சந்திப் கூறுகையில், “2 பெண்களை திருமணம் செய்வதில் சட்ட சிக்கல் இருக்கலாம். ஆனால் நான் இருவரையும் காதலிக்கிறேன். இவர்களில் ஒருவரை கூட விட்டு பிரிய முடியாது" என்றார்.

சமீபத்தில் வெளியான திரைப்படம் ‘காத்துவாக்குல ரெண்டு காதல்’. இதில், இரண்டு பெண்கள் ஹீரோவை காதலிப்பார்கள். அதேபோல, இருவரையும் ஹீரோ காதலிப்பார். ஒருவரை விட்டு இன்னொருவரை திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என பிடிவாதமாக இருப்பார். இறுதியில், இரு பெண்களை ஒரே சமயத்தில் காதலிப்பது தவறென உணர்ந்த ஹீரோ, இருவரையும் விட்டு பிரிந்து சென்று விடுவார்.

இதுபோன்ற ஒரு சம்பவம் தற்போது நிஜத்தில் அரங்கேறியுள்ளது. ஆனால், ஒரே ஒரு வித்தியாசம். இதில் இரண்டு பெண்களும் காதலித்த நபரை திருமணம் செய்து கொண்டுள்ளனர்.

---



சென்னை

# கனிமொழிக்கு மீண்டும் கொரோனா

திராவிட முன்னேற்ற கழகத்தின் (தி.மு.க )எம்.பியான கனிமொழிக்கு கொரோனா தொற்றியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து அவர் வீட்டிலேயே தன்னை தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார்.

2021 ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் சமயத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த கனிமொழி குணமடைந்தார். தற்போது மீண்டும் 2 ஆவது முறையாக அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

---

கள்ளக்குறிச்சி

# 50 வயதானவரால் 34 வயது பெண் கர்ப்பம்

திருக்கோவிலூர் அருகே உள்ள இளையனார்குப்பம் கிராமத்தை சேர்ந்தவர் 50 வயதானவர்; சிறுபனையூர் கிராமத்தில் மற்றுமொருவருக்குச் சொந்தமான நிலத்தை குத்தகைக்கு எடுத்து பயிர் சாகுபடி செய்து வந்தார்.

அந்த நிலத்தில் திருமணம் ஆகாத 34 வயது பெண் ஒருவர் வேலைக்கு வந்து சென்றார். அப்போது அவ்விருவருக்கும் பழக்கம் ஏற்பட்டது.

திருமணம் செய்துகொள்வதாக ஆசைவார்த்தை கூறி, அந்தப் பெண்ணிடம் அந்நபர் அவ்வப்போது உல்லாசம் அனுபவித்து வந்துள்ளார். பெண்ணும் கர்ப்பமடைந்துள்ளார். அதனால், தன்னை திருமணம் செய்து கொள்ளுமாறு அவரிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவரோ திருமணம்செய்ய மறுத்ததோடு கொலை மிரட்டல் விடுத்ததாகவும் கூறப்படுகிறது. எனினும், அந்தப் பெண் கொடுத்த முறைப்பாட்டின் பிரகாரம், திருக்கோவிலூர் அனைத்து மகளிர் பொலிஸார், அந்நபரை கைது செய்து விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

வடகொரியா

# வட கொரியாவை அச்சுறுத்தும் மர்ம நோய்



வடகொரியாவில் நூற்றுக்கணக்கான மக்கள் ஒரு மர்ம நோயால் பாதிப்படைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட கொரியாவின் ஹவாங்ஹே( Hwanghae )என்னும் மாகாணத்தில் இருக்கும் 800 குடும்பங்களை சேர்ந்த மக்களுக்கு இத் தொற்றுநோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜொங் உன் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்நோயால் பாதிப்படைந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக உணவு பற்றாக்குறை மற்றும் கொரோனாத் தொற்றுப் பரவல் போன்றவற்றினால் வடகொரியா கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த மர்ம நோய் தொற்று மேலும் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கனடா

# பஸ்ஸில் பெண்ணுக்கு தீ மூட்டியவர் கைது

பஸ்ஸில் பெண்ணொருவர் மீது மர்ம நபர் ஒருவர் தீ வைத்த சம்பவம் கனடாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கனடாவின் ரொரன்ரோவில் கடந்த வெள்ளிக்கிழமையன்று இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று குறித்த நபர் அப் பெண் மீது திரவமொன்றை ஊற்றி, தீ வைத்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் படுகாயங்களுக்குள்ளான அப் பெண் உடனடியாக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தப்பிச் சென்ற மர்ம நபரைப் பொலிஸார் பிடித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




கம்போடியா

# பெரிய நன்னீர் மீன் கண்டுபிடிப்பு

கம்போடியாவில் டிங்கிரே (stingray )எனப்படும் உலகின் மிகப் பெரிய நன்னீர் மீன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கம்போடியாவின் வடக்குப் பகுதியில் உள்ள-மெகொங்(Mekong) ஆற்றிலேயே சுமார் 661பவுண்ட் எடை(299.8 kg) கொண்ட குறித்த மீன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீனவர் ஒருவர் வலையில் சிக்கி இருந்த இந்த மீனை மீன் ஆராய்ச்சியாளர்கள் பரிசோதித்ததில் இந்த விவரம் தெரிய வந்துள்ளது.

இதற்கு முன்பு தாய்லாந்தில் கடந்த 2005ஆம் ஆண்டு பிடிக்கப்பட்ட மீன் 646பவுண்டு (293kg)எடை கொண்டதாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



இஸ்ரேல்

# 4ஆண்டுகளில் 5ஆவது தேர்தல்

இஸேரலில் பிரதமர் நப்தாலி பென்னட் தலைமையிலான அரசு கவிழ உள்ள நிலையில், அங்கு 5-ஆவது முறையாகத் தேர்தல் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அடுத்த வாரம் ஆட்சியைக் கலைப்பதற்கான மசோதா தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும், மசோதா வெற்றி பெற்றால் மீண்டும் தேர்தல் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அதுவரை காபந்து அரசின் பொறுப்பாளராக, வெளியுறவு அமைச்சராக உள்ள Yair Lapid தலைமை வகிப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் 5ஆவது முறையாக இஸேரலில் தேர்தல் நடத்தப்பட உள்ள நிலையில் முன்னாள் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆட்சியைக் கைப்பற்றத் திட்டமிட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



அமெரிக்கா

# 36 மணி நேரத்தில் 3 ரொக்கெட்கள்

உலக கோடீஸ்வரர்களின் ஒருவரான எலான் மஸ்க், டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் தலைமை செயற்பாட்டு அதிகாரியாகவும் செயற்பட்டு வருகிறார்.

ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனமானது விண்வெளி தொடர்பான பல ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

அந்த வகையில் தற்போது அந்த நிறுவனம் 36 மணி நேரத்தில் 3 ரொக்கெட்களை விண்ணில் ஏவி புதிய சாதனைப் படைத்துள்ளது.



இதற்கு முன்னர் கடந்த ஜனவரி மாதமும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் 2 நாட்களில் 3 ரொக்கெட்களை விண்ணில் ஏவி சாதனை படைத்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொலைத்தொடர்பை மேம்படுத்துவதற்காக புளோரிடா மாகாணத்தில் உள்ள கேப் கனாவெரல் விண்வெளிப் நிலையத்தில் இருந்து கடந்த 19 ஆம் திகதி செயற்கை கோளுடன் “ஃபால்கன் 9” விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது.

பிரித்தானியா

# ஒரு நாளைக்கு 30 கேன்கள் பெப்சி அருந்தும் நபர்

பிரித்தானியாவின் நார்த் வேல்ஸ் பகுதியைச் சேர்ந்தவர் ஆண்டி க்யூரி. 41 வயதான இவர் தன்னை பெப்சி குளிர்பானத்தின் மாபெரும் அடிமை எனக் கூறி வருகின்றார்.

இவர் தனது 20 ஆவது வயதில் இருந்து பெப்சியை அருந்த ஆரம்பித்துள்ளதாகவும் , இதுவரை சுமார் 2,19,000 பெப்சி கேன்களை அருந்தியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாளைக்கு சராசரியாக 30 பெப்சி கேன்களை அருந்துவதாகக் கூறும் இவர், இதுவரை பெப்சி வாங்க மாத்திரம் ஆண்டுக்கு இலங்கை மதிப்பில் சுமார் 30 .66 லட்சம் ரூபாயை செலவிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.



இதனால் ஒரு கட்டத்தில் இவரது உடல் எடை 120 கிலோ கிராமைத் தாண்டியதாகவும், இதனையடுத்து தனது உடல் நலனை சீராக்க லண்டனைச் சேர்ந்த மருத்துவரான டேவிட் கில்முரி என்பவரிடம் சிகிச்சை பெற்று வந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சிகிச்சைக்குப் பின்னர் சுமார் 12 கிலோகிராம் எடையைக் குறைத்துள்ள க்யூரி, ஒரு மாத காலமாக பெப்சி குடிப்பதை நிறுத்தியுள்ளதாகக் கூறியுள்ளார்.

மேலும், இப்போது தான் தண்ணீரை அதிகம் விரும்பிக் குடிப்பதாகவும், தனது சருமம் முன்பை விட நன்றாக இருப்பதாக மனைவி பாராட்டுவதாக க்யூரி மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இது குறித்து கருத்துத் தெரிவித்த மருத்துவர் டேவிட் கில்முரி” குளிர்பானங்களுக்கு அடிமை ஆவது மிகவும் ஆபத்தானது எனவும், அளவுக்கு அதிகமாக இவ்வளவு குளிர்பானத்தை குடிப்பது உடலின் முக்கிய பாகங்களுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும்”எனவும் தெரிவித்துள்ளார்.

நான்காவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

# 258 ஓட்டங்களைப் பெற்ற இலங்கை

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 4ஆவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, 49 ஓவர்களில் சகல விக்கெட்டுகளை இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், கொழும்பு ஆர். பிரேமதாஸ நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

அவுஸ்திரேலிய அணி சார்பாக, ஜஹை றிச்சர்ட்ஸனை பற் கமின்ஸ் பிரதியிட்டிருந்தார். இலங்கையணி சார்பாக உபாதைக்குள்ளான துஷ்மந்த சமீரவை காயத்திலிருந்து குணமடைந்த வனிடு ஹஸரங்க பிரதியிட்டிருந்தார்.

இலங்கை, நிரோஷன் டிக்வெல்லவை கிளென் மக்ஸ்வெல்லிடம் இழந்தது.




பின்னர் குசல் மெண்டிஸ், பதும் நிஸங்கவையும் குறிப்பிட்ட இடைவெளிகளில் கமின்ஸ், மார்ஷிடம் இழந்தது.

பின்னர் சரித் அஸலங்கவின் இணைப்பில் இனிங்ஸை நகர்த்திச் சென்ற தனஞ்சய டி சில்வா 60 (61) ஓட்டங்களுடன் மார்ஷிடம் வீழ்ந்ததோடு, அடுத்து வந்த அணித்தலைவர் தசுன் ஷானகவும் உடனேயே ரண் அவுட்டானார். தொடர்ந்து வந்த டுனித் வெல்லாகேயின் இணைப்பில் ஓட்டங்களை அஸலங்க சேகரித்த நிலையில் மத்தியூ கூனமனிடம் வெல்லாகே வீழ்ந்தார்.




சர்வதேசப் போட்டி சதத்தைப் பூர்த்தி செய்த அஸலங்க, 110 (106) ஓட்டங்களுடன் வீழ்ந்ததோடு, அடுத்து வந்த ஜெஃப்ரி வன்டர்சே, மகேஷ் தீக்ஷன ரண் அவுட்டாக 49 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 258 ஓட்டங்களை இலங்கை பெற்றது.

# இந்திய அணியில் விரைவில் இணையவுள்ள அஷ்வின்

பிரித்தானியாவுக்கு இந்திய அணியின் டெஸ்ட் குழாம் கடந்த வாரம் பயணித்தபோது விமானத்தை தவற விட்ட இரவிச்சந்திரன் அஷ்வின், அடுத்த இரண்டு நாள்களில் இங்கிலாந்தை அடைவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ள பயிற்சிப் போட்டிக்கு முன்னர் குழாமுடன் அஷ்வின் இணைந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக முன்னர் அஷ்வின் பயணிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




# பார்சிலோனா செல்லும் பெர்னார்டோ சில்வா?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் மத்தியகளவீரர் பெர்னார்டோ சில்வா, ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவுக்குச் செல்லவுள்ளார் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில், சிற்றியில் 27 வயதான சில்வா தொடர விரும்புவதாகத் தெரிவித்துள்ள சிற்றியின் முகாமையாளர் பெப் குவார்டியோலோ, எனினும் மகிழ்ச்சியற்ற வீரர்களை கழகத்தில் வைத்திருக்க விரும்பவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.




கிண்ணியா கால்பந்தாட்ட சம்மேளனத் தொடர்:

# சம்பியனானது புளூ பேர்ட்ஸ்

■ கியாஸ் ஷாபி

கிண்ணியா கால்பந்தாட்டச் சம்மேளனத்தால் நடாத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் புளூ பேர்ட்ஸ் சம்பியனானது.

கிண்ணியா கால்பந்தாட்ட சம்மேளனத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள 23 அணிகள் பங்கேற்ற இத்தொடரில் றேஞ்சர்ஸை 1-0 என்ற கோல் கணக்கில் வென்றே புளூ பேர்ட்ஸ் சம்பியனானது. தமது அரையிறுதிப் போட்டியில் நஷனல் அணியை புளூ பேர்ட்ஸ் வென்றும், தமது அரையிறுதிப் போட்டியில் டிஸ்கோ அணியை றேஞ்சர்ஸ் வென்றும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தன.




# செல்சி செல்லும் றிஷலிஷன்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான எவெர்ற்றனின் முன்களவீரரான றிஷலிஷனைக் கைச்சாத்திட இன்னொரு பிறீமியர் லீக் கழகமான செல்சியும் விரும்புவதாகக் கூறப்படுகிறது.

25 வயதான றிஷலிஷனை வேறொரு பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரும் கைச்சாத்திட விரும்புகின்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 22 ஜூன் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.